
Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 முஹறம் 30 (22.03.2004) திங்கட்கிழமை இதழ்:173

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER SM வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி-2015)



சிறுவர்கள் ஒப்படைப்பு நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா, திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மற்றும் யுனிசெப் பிரதிநிதி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# புலிகள் அமைப்பில் இணைந்த 35 சிறுவர்கள் நேற்று ஒப்படைப்பு!

## சம்பூரில் இடம்பெற்றது

(திருகோணமலை)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட 18 வயதுக்குட்பட்ட 35 சிறுவர்களை புலிகள் நேற்று திருகோணமலையில் யுனிசெப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுக் காலை மூதூர் கிழக்கு சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்விலேயே 35 சிறுவர்களும் ஒப்படைக்கப்பட்டனர்.

புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.திலக், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், தியாகராஜா, சமாதானச் செயலத்தைச் சேர்ந்த பவான், திருமலை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா, யுனிசெப் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஜஸ்மின் ஹக் மற்றும் யுனிசெப் பிரதிநிதி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.முவை ஆட்சியில் அமர்த்த வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



**எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியை வெற்றிபெறச் செய்வதற்கு பல வெளிநாட்டு அரசாங்கங்கள் முயற்சிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

**இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-**

தனது முக்கிய அரசியல் எதிரியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தகைய உதவிகளை வெளிநாட்டு அரசாங்கங்கள் வழங்குகின்றன.

இந்த உதவியை இலங்கையில் தேர்தலைக் கண்காணிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள பவ்ரல் மற்றும் அமெரிக்காவின் தேசிய தேர்தல் கண்காணிப்பாளர் குழு என்பவற்றினூடாகவே வழங்கப்படுகிறது.

இதனை கனடா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் சேர்ந்தே மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கருதுவதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் அமைப்புக்களுக்காக 85 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தோற்கடிப்பதற்கான ஒரு சதிமுயற்சியாகும்.

அவ்வாறானதொரு பெரிய தொகை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குச் செலவு செய்ததில்லை. ஆனால், இம்முறை அத்தகையதொரு பெரிய தொகை தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை (12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழுவினரால் பிரசாரத்துக்கு தடை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக சென்றிருந்த புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் கருணா குழுவினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# உடதலவின்ன படுகொலைக்கு மன்னிப்புக் கோரினார் சந்திரிகா

(கொழும்பு)

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது, கண்டி - உடதலவின்னவில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முஸ்லிம்களிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோரியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீவிர ஆதரவாளரான பத்து முஸ்லிம் இளைஞர்களும் தேர்தல் தினத்தன்று, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகாவின் வலது கையாகத் திகழ்ந்தவருமான ஜெனரல் ரத்வத்தையின் உத்தரவின் பேரில் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இது ஒரு எதிர்பாராத சம்பவம் என்றும் இதற்காக தாம் மனப்பூர்வமாக முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா முஸ்லிம்களிடம் தெரிவித்தார்.

# புளியங்குளத்தில் முதல் நாளே வாக்காளர் தங்கவைக்கப்படுவர்

(கொழும்பு)

வன்னி மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும், வாக்களிக்க தகுதியுள்ள மக்கள் அனைவரையும் வாக்களிப்புக்கு முதல் நாள் புளியங்குளத்திற்கு அழைத்துச்சென்று தங்க வைத்து, மறுநாள் வாக்களிக்க அழைத்து செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான கே.கணேஸ் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்கள் வாக்களிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் எஸ்.பரமகுலசிங்கம், வவுனியா செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.வி.தங்கராஜா, போக்குவரத்து அலுவலர்கள், தனியார் வாகன உரிமையாளர்கள், நீர்வழங்கல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி, பொறியிலாளர் சிவபாதம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது-

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் வாக்களிக்கத் தகுதியுள்ள மக்கள் அனைவருக்கும் - போக்குவரத்து வசதி செய்யப்பட்டு, அனைவரும் வாக்களிப்பதற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு வேட்பாளர்களிடையே குத்து வெட்டில் அறுவர் படுகாயம்!

அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவர் மற்றைய கூட்டமைப்பு வேட்பாளரையும் அவரது ஆதரவாளர்களையும் தாக்கியதில் அவர்கள் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

தம்பிலுவில் - திருக்கோவில் பகுதியில் தாக்கப்பட்ட வேட்பாளரும் அவரது ஆதரவாளர்களும் தமக்கு ஆதரவாகப் பிரசாரம் மேற்கொண்டபோது, அங்கு வந்த கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட தலைமை வேட்பாளரும் அவரது ஆதரவாளர்களும் காரணமேதுமின்றி (12 ஆம் பக்கம் பார்க்க)

# பட்டமளிப்பை பிற்போடுமாறு கோரி மறியற்போராட்டத்துக்கு திட்டம்!

எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள, யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவைப் பிற்போடுமாறு கோரி- மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் இன்று போராட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிப் பரீட்சைகளில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை. இவர்களுக்கான மீள் பரீட்சைகள் இடம்பெறாத நிலையில் 27 ஆம் திகதி பட்டமளிப்பு நடைபெற்றால், இவர்கள் தமது பட்டச் சான்றிதழ்களை பெற ஒரு வருடம் காத்திருக்க வேண்டியேற்படும்.

இதனால், வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்படும். இவற்றைச் சுட்டிக்காட்டியே போராட்டம் நடத்தப்படவுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர். (111)

# ஹையேஸ் வானில் கடத்தப்பட்ட 11 வயதுச் சிறுவன் தப்பி ஓட்டம் !

## வடமராட்சியில் பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத குழு ஒன்றினால் வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்ட பாடசாலை மாணவன் கடத்தல் காரர்களிடமிருந்து சாதுரியமாக தப்பிவந்த சம்பவம் ஒன்று வடமராட்சியில் இடம்பெற்றது.

கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை முதலைக்குழி கரணவாய் தெற்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பதினொரு வயதான தவகுலரத்தினம் தர்ஷன் என்ற மாணவன் கடந்த 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு விக்கினேஸ்வரா கல்லூரிக்கு சென்றபோது பாடசாலை ஆரம்பமாகிவிட்டது.

இதனையடுத்து, தனது வீடுநோக்கி சென்றுகொண்டிருந்த சமயம் வெள்ளை ஹையேஸ் வானில் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# கழிவுப் பொருட்கள் போடுவதால் மானிப்பாய் வீதி துர்நாற்றம்!

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடச் சந்தியிலிருந்து ஆறு கால்மடம் வரையான மானிப்பாய் பிரதான வீதியின் அண்மையிலுள்ள வயல்வெளிப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

இந்த வீதிக்கு அண்மையிலுள்ள வயல் வெளிகளில் இறந்த விலங்குகளின் உடல்களையும், கழிவுப் பொருட்களையும் கொட்டுவதனால், அவை சில தினங்களின் பின் அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரியவருகிறது.

மானிப்பாய் வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் துர்நாற்றத்தினை சுவாசிக்க முடியாது அவஸ்தைப்பட்டுச்செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தப்பகுதியில், போடப்பட்ட கழிவுப் பொருட்கள் அகற்றப்படாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே - இந்தக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அந்தப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கூட்டமைப்பின் பிரசாரம் நெடுந்தீவில் தீவிரம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவான பிரசார நடவடிக்கைகள் கடந்த வார இறுதியில் ஆரம்பமானது.

முதற்கட்டமாக நெடுந்தீவு மேற்குப் பகுதியில் பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன், நாளை தொடக்கம் நெடுந்தீவு மத்தி, கிழக்கு பகுதிகளுக்கான பிரசார நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினருமே இந்தப்பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு நெடுந்தீவு பிரதேசசபை பொது மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்களின் ஒன்றுகூடலும், தமிழீழ இசைக்குழுவினரின் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள

# பருத்தித்துறை தபால் நிலையத்தை இயக்க அனுமதி பெற்றுத் தருக!

## அஞ்சல் அத்தியட்சகர் சிவராஜசிங்கம் கோரிக்கை

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பருத்தித்துறை தபால் நிலையத்தை மீள இயக்குவதற்கான அனுமதியினை பெற்றுத்தருமாறு யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் என்.சிவராஜசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் குடாநாட்டுக்கு வந்திருந்த அஞ்சல் மா அதிபர் சேனதீரவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாகத் தெரியவருகின்றது.

1996 ஆம் ஆண்டு வடமராட்சியை இராணுவம் கைப்பற்றியவேளை, பருத்தித்துறை இறங்குதுறையை மையமாக வைத்து இந்த முகாம் அமைக்கப்பட்டது.

இதனால், பருத்தித்துறை தபால் நிலையம் இயக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, மேற்படி தபால் நிலையம் நகரிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகின்றது.

இதனால், இடநெருக்கடி மற்றும் வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

இந்தநிலையில், தபால்நிலையத்தை சொந்த இடத்தில் இயக்குமாறு அப்பகுதி பொது அமைப்புக்கள் கோரிவருகின்றன.

எனவே, மேற்படி தபால் நிலையத்தை மீள இயக்குவதற்கு வசதியாக பாதுகாப்பு வலயத்தினுள் உட்சென்று கட்டடங்களைப் புனரமைப்புச் செய்து தபால் நிலையத்தை மீள இயக்குவதற்கும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு அனுமதி பெற்றுத்தருமாறு கேட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி தபால் நிலையத்தின் சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக கடந்த வருடம் கொழும்பிலிருந்து வந்திருந்த கட்டடக் கூட்டுத்தாபன அதிகாரிகள் அங்கு சென்று மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதி மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப் பாடசாலை கட்டடம் திறப்பு

அநுராதபுரம் விவேகானந்த சபையின் நலன்விரும்பிகளின் உதவியுடன் நீராவியடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் விவேகானந்தர் பாலர் பாடசாலை, ஸ்ரீ அம்பாள் அறநெறிப்பாடசாலைக் கட்டடத் திறப்புவிழா நடைபெற்றது.

விவேகானந்த பாலர் பாடசாலையை ரூவான்வெலிசாய விகாராதிபதி வணக்கத்துக்குரிய பள்ளேகம ஸ்ரீசுமனா ரத்னபால ஹேமரத்ன தேரரும், அறநெறிப் பாடசாலையை அகில இலங்கை இந்துமாமன்ற கௌரவ தலைவர் வி.கயிலாசபிள்ளையும் திறந்துவைத்தனர். இவ்விழாவிற்கு ஸ்ரீ கதிரேசன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரன் குருக்கள் தலைமை வகித்தார்.

# வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் அதிகரிப்பு!

## பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டின் முக்கிய சந்திகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால், போக்குவத்திற்குப் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, யாழ்.நகரை அண்டிய வெலிங்ரன் சந்தி, இலுப்பையடிச் சந்தி, சிவலிங்ளகப்புளியடிச் சந்தி, சத்திரச் சந்தி உள்ளிட்ட பல சந்திகளில் வாகனங்கள் திருத்தும் 'கராச்'கள் அமைந்திருப்பதாலும், திருத்த வேலைக்கென கொண்டுவரப்படும் வாகனங்கள் சந்தியை அண்டிய வீதியோரங்களில் நிறுத்தப்படுகின்றன. இதனால், சந்திகளைக் கடக்க முற்படும் வாகனங்களும், சைக்கிள் பயணிகளும் மற்றும் பாதசாரிகளும் அந்தப்பகுதியூடாக வரும் வாகனங்களை அவதானிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனால், விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுவதுடன், பொதுமக்களின் போக்வரத்துக்கும் பெரும் சிரமங்கள் ஏற்பட்டள்ளன.

இதேபோல் - திருநெல்வேலிச் சந்தி, பரமேஸ்வராச் சந்தி, கஸ்தூரியார் வீதிச் சந்தி, உள்ளிட்ட பல பகுதிகளிலும் பலர் தாம் பயணிக்கும் வாகனங்களை நிறுத்துவதாலும், இத்தகைய சம்பவங்கள் உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்.குடாநாட்டு மக்கள் பெரும் விஷனம் தெரிவித்திருப்பதுடன், பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ப)

# இடைநிறுத்தப்பட்டுள்ள கிராம அலுவலர்கள் மீண்டும் சேவையில் நியமிக்கப்பட்டுள்ளனர்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் கிராமசேவை அலுவலராக சேவையாற்றிய இருவர்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட பின்னர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதப்பிள்ளை இந்த இடமாற்றத்தைச் செய்துள்ளார்.

போக்கறுப்பு கிராமசேவை அலுவலராக கடமையாற்றிய ந.பாலசுந்தரம் -வித்திராயன் கிராமசேவை அலுவலராகவும், ந.தங்கத்துரை போக்கறுப்பு சுண்டிக்குளம் கிராம அலுவலராகவும், வித்திராயன் கிராம அலுவலர் ச.சி.உலகநாதன் மருதங்கேணி கிராம அலுவலராகவும் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (17)

## வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலய மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரசிவம் தலைமையில் இடம் பெறும் இந்தநிகழ்வில், வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.றெஜீனா இருதயநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (101)



புற்றளை மகாவித்தியாலய மாணவர்களுக்கு தும்பளை யோகசாந்தி நிலையத்தினரால், காண்பிக்கப்பட்ட யோகாசன கண்காட்சியின்போது, அந்த நிகழ்வில் கலந்துகொண்ட புற்றளை மகாவித்தியாலய அதிபர் திருமதி. இந்திரராசா மற்றும் பயிற்றுனர் பொன்.மகாதேவா, மல்யுத்த பயிற்றுனர் எஸ்.செல்வநாயகம் ஆகியோரையும் காணலாம். (17)

தென்மராட்சி மேற்கு கூட்டுறவுச் சங்கத்தில்

# ஆயிரத்து 150 அங்கத்தவர்கள் கூட்டுறவு மாதத்தில் இணைவு!

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் புதிய கூட்டுறவு அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்காக நடாத்திய கூட்டுறவு மாதத்தில் ஆயிரத்து 150 புதிய அங்கத்தவர்களை புதிதாக இணைந்துள்ளனர்.

மேற்படி சங்கம் கடந்த ஜனவரி-பெப்ரவரி மாதங்களை கூட்டுறவு அங்கத்தவர்களை இணைக்கும் மாதமாக பிரகடனப்படுத்தினர்.

இதன்போது, கூட்டுறவின் தன்மைகள் பற்றியும், அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும், கூட்டுறவில் இருப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்தும் சங்கப் பணியாளர்கள் விளக்கம் அளித்தனர்.

இதன் பின்னர், ஆயிரத்து 150க்கு மேற்பட்டவர்கள் தம்மைப் புதிய அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டனர்.

இதேவேளை, புதிய அங்கத்தவர்களை இணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சங்கப் பணியார்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டதாக சங்க முகாமையாளர் தெரிவித்தார். (34)

## தேர்தல் கூட்டம்

(வடமராட்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பிரசாரம் இன்று மாலை 5 மணிக்கு திக்கம் சந்தியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளர் க.சூரியகுமார், தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா, கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் உரையாறறவுள்ளனர்.

## அரியாலையில் கும்பாபிஷேகம்

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை காலை 6.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதே சுபவேளையில் இவ்வாலயத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரத்துக்கும், கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

## சம்பந்தன் நாளை யாழ்.வருகிறார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும், திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் மற்றும் துரைரட்ணசிங்கம் ஆகியோர் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொண்டர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற இடங்களில், தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் பங்கேற்கவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இவர்கள் இரண்டு தினங்க்ள் வரை தங்கவுள்ளதாக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.(தீ)

கொள்கைக்கான தேர்தல் - 2004 - ஏப்ரல் - 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
யாழ்.மாவட்ட வேட்பாளர்
செல்வராஜா கஜேந்திரன்
முன்னாள் யாழ்.பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியதலைவரும், சர்வதேச தமிழீழ மாணவர்
பேரவைத் தலைவரும்,
மக்களினதும், மாணவர்களினதும்
உரிமைக்காக குரல்கொடுத்த கஜேந்திரனுக்கு
எமது விருப்பு வாக்கினைச்
செலுத்தி அவரை
வெற்றியடையச் செய்வோம்.
X 10
எமது நிலம் எமக்கு வேண்டும் (668)
- கரவெட்டி மக்கள் -

ராஜா யாழ்ப்பாணம்.
சூர்யா, த்ரிஷா நடித்த


10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2263)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பார்த்தீபன், விக்னேஸ், உமா நடித்த
ஆரி
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Chicken Run
(சி-2262)

# நெதர்லாந்து இராஜதந்திரிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

நெதர்லாந்தின் இராஜதந்திரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியறதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் - நெதர்லாந்து தூதுவராலயத்தின் முதன்மைச் செயலாளர் ஜான் கியூஸ்க்கன், முரண்பாட்டு ஆய்வுகளுக்கான பேராசிரியர் ஜோர்ஜ் எப் ப்ரேக்ஸ் மற்றும் இனமுரண்பாட்டு கற்கைநெறிக்கான பேராசிரியர் கலா நிதி கிறீஸ் வான் தர் போர்க் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இன்றைய அரசியல் சூழ்நிலை, இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# நோயாளர் உரிமைக்காக சங்கம் அமைக்கப்பட்டது

(கொழும்பு)

நோயாளர்களின் உரிமையைக் காப்பதற்கான சங்கம் ஒன்று கடந்தவாரம் உருவாக்கப் பட்டிருக்கிறது.

அரசாங்க மருத்துவ அதிகாரி'கள் சங்கம் அண்மைக்காலமாக தொடர்ந்து மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் நோயாளர்கன் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைக் கருத்தில்கொண்டே நோயாளர்களின் உரிமைகளுக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது.

மருத்துவ அதிகாரிகளின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் கடந்த 19 ஆம் திகதி களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கர்ப்பிணிப்பெண் ஒருவர் தகுந்த மருத்துவ சிகிச்சையின்றி உயிரிழந்தார்.

இத்தகைய சூழ்நிலைகள் இனிமேல் ஏற்படாமல் தடுக்கும் நோக்கத்திலேயே நோயாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சங்கம் உருவாக்கப்பட்டதென தெரியவருகிறது.

## 'தமிழ் அலை' ஊழியர்கள் வீட்டுக்காவலில்!

மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் 'தமிழ் அலை' பத்திரிகை நிறுவனததில் கடமையாற்றும் ஊழியர்கள் கருணா குழுவினரால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு, கட்டாயபணியில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இயங்கும் இந்தப் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் வட்டுக்காவலில் வைக்கப்பட்டு, நாளாந்தம் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்ற அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இதேவேளை, பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் முக்கிய ஊழியர்களின் குடும்பங்களும் வீடுகளை விட்டு வெளியேறவிடாது தடுக்கப்பட்டுள்ளனர். இந்தப் பத்திரிகை நிறுவனத்தைச் சுற்றி இருபதுக்கும் மேற்பட்ட கருணா குழுவினர் ஆயுதங்களுடன் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கிழக்கிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளுடன் செய்யவிருந்த ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சியே குழப்பியடித்ததாம்!

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விடுதலைப்புலிகளின் தலைவருடன் ஒப்பந்தம் செய்வதற்கு திட்டமிட்டிருந்தவேளை ஐக்கிய தேசிய கட்சி செய்த சூழ்ச்சியால் அதனை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனது.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்திருப்பதாவது 2001 ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த வேளை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒப்பந்தம் ஒனறினைச் செய்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என தீர்மானித்தேன்.

இந்த நிலையில் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசியலில் குழப்பங்களை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளியது எனக் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் இந்த நடவடிக்கையால் விடுதலைப்புலிகளின் தலைவருடன் ஒப்பந்தம் செய்யமுடியமாமறபோனது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆட்சியமைக்கும் எந்த அரசாங்கமும் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்கக்கூடாது. இதற்கு நான் பூரண ஆதரவு வழங்குவேன்.

தற்போது சமாதானம் நிலவுவதாகக் கூறப்படுகிறது. இது ஒரு போநிறுத்தமே தவிர சமாதானம் அல்ல.

போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி நாட்டில் சமாதானத்தினை கொண்டுவர தாம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (01)

## கிழக்கு மாகாணத்தில் — விசேட அதிரடிப்படையினர் அதிகபட்ச விழிப்பு நிலையில்!

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் விசேட அதிரப்படையை - அதி உச்சப் பாதுகாப்புடனும், விழிப்புடனும் இருக்கவேண்டும் என விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால்லெகே உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் காலத்தில் நடைபெறக்கூடிய வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் கருணாவின் செயற்பாடுகள் காரணமாகவுமே அவர் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்.

கல்முனையில் பொலிஸ் அதிகாரியின் இடமாறறத்தையிட்டு ஹர்த்தால் ஒன்று அனுஷடிக்கப்பட்டபோது, இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்திருந்தனர்.

இந்த இளைஞர்கள் ஹர்த்தாலுடன் தொடர்புடையவர்களா? என பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

இந்த விசாரணைகளிலிருந்து சூட்டுக் காயத்திற்கு இலக்கான இளைஞர்கள் இருவருக்கும் அங்கு நடைபெற்ற ஹர்த்தாலுக்கோ, தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கோ தொடர்பில்லையெனத் தெரியவந்தது.

சுடப்பட்ட இளைஞர்கள் இருவரும் அப்பாவி இளைஞர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுடப்பட்ட ஒருவர் தற்போது கண்டி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால்லெகே மேலும் தெரிவித்தார்.

# மட்டு - அம்பாறை மக்கள் கருணாவின் மீது அதிருப்தி!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்ட முன்னாள் தளபதி கருணா மீது மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்கள் படிப்படியாக அதிருப்தியடைந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை மீது பல பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அதனை மக்கள் நம்புமாறு செய்வதற்கு முயன்று வந்த கருணாவும், அவரது ஆதரவாளர்களும் இப்போது மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை இழந்து வருவதாக அறியமுடிகிறது.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளான வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பிரதேசம், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் ஆகிய கோரிக்கைகளுக்கு எதிராக கருணாவின் ஆதரவாளர்கள் வெளியிட்டுவந்த கருத்துக்கள் காரணமாக, கருணாவின் உண்மைத் தோற்றத்தை மட்டக்களப்புவாழ் மக்கள் அறிந்துகொண்டுவிட்டதாகவும் மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், தனது தவறுகளை மறைப்பதற்காக கருணா ஆதரவாளர்களால் கிளப்பிவிடப்பட்ட பிரதேச வாதமும் தற்போது மழுங்கி விட்டதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவாக நடாத்தப்பட்ட எழுச்சிப் பேரணியை, திடிரென கருணா ஆதரவுப் பேரணியாகவும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களான கரிகாலன், ரமேஸ், பொட்டம்மான் ஆகியோருக்கு எதிரான போராட்டமாகவும் மாற்றுவதற்கு கருணாவின் ஆதரவாளர்கள் முயற்சிகள் எடுத்தமையாலும், பேரணியில் கலந்துகொண்ட மக்கள் விசனம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்னை பூபதியின் நினைவாக ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பேரணியை, கருணா ஆதரவுப் பேரணியாக லண்டன் பி.பி.சி. உட்பட பல உள்ளுர், சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜாதிக ஹெல உறுமயவின் — மேலும் ஒரு வேட்பாளர் போட்டியிலிருந்து விலகல்

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளராகப் போட்டியிட நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்த பௌத்த பிக்கு ஒருவர் தான் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

ஹேமபுரவிலுள்ள பொறுக்கராம பௌத்த நிலையத்தைச் சேர்ந்த வண.கணேகொட தர்ம கீர்த்திதேரோவே போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

ஜாதிக ஹெல உறுமயவின் பட்டியலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்த இவர்-தாம் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதற்கு- ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் போட்டியிடும் பௌத்த பிக்குகளின் நம்பிக்கையில்லாதமையே காரணம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அத்துடன் தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்கப்போவதாகவும் தர்மகீர்த்திதேரோ தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் போட்டியிட வேட்புமனுத்தாக்கல் செய்த பௌத்த பிக்குகளில் மூவர் இதுவரை தாம் போட்டியிலிருந்து விலகுவதாக தெரிவித்துள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல்செய்த - ராகுல தேரோவும், கம்பஹா மாவட்டத்தில் வேட்புமனுத் தாக கல்செய்த வண.சுபரேகே பண்ணானந்த தோரே ஆகியோரே போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

## அரச ஊடகங்கள் — பக்கச்சார்பாக செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி புகார்!

அரச ஊடகங்கள் தேர்தல் காலத்தில் பக்கச்சார்பாகச் செயற்பட்டு வருவது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த ஊடகங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு, தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை தேர்தல்கள் ஆணையாளர் நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களான விமல் வீரவன்ச மற்றும் ஜனதாச பீரிஸ் ஆகியோர் அரச ஊடகங்களின் பணிப்பாளர்களைச் சந்தித்து தினமும் அந்த ஊடகங்களில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய விதம் குறித்து கலந்துரையாடிவருவதாக தமது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புகொடுவ, இது சட்டவிரோதமான ஒரு நடவடிக்கையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹரீம் பீரிஸ், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத் தலைவர் நியூட்டன் குணதிலக, லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத் தலைவர் பரண விதான ஆகியோர் இவ்வாறு தினமும் விமல் வீரவன்சவையும், ஜனதாச பீரிசையும் சந்தித்து உரையாடி வருவதாகவும் அவர் தமது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளார்.



அன்னை பூபதி நினைவாக கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வில் திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடரேற்றப்படுவதையும், தேசியக்கொடியை செம்மணன் ஏற்றுவதையும் படத்தில் காணலாம்.

## நியூஸிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட்;

# ஆறு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு தென்னாபிரிக்கா 277 ஓட்டங்கள்!


கலிஸ்

(ஒக்லன்ட்)

நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக் கிடையில் ஒக்லண்டில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று தென்னாபிரிக்க அணி, தனது இரண்டாவது இனிங்ஸில் ஆட்டநேர முடிவின் போது ஆறு விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக மூன்றாம் நாள் எட்டு விக்கெட் டுக்களை இழந்து 584 ஓட்டங்களைப் பெற்றி ருந்த நியூசிலாந்து, நேற்றைய ஆட்டத்தின்போது ஒன்பது ஓட்டங்களுக்குள் மிகுதி இரண்டு விக் கெட்டுக்களையும் இழந்தது. இதன்படி நியூஸி லாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 595 ஓட்டங்களைப் பெற்றது. இதன் படி நியூஸிலாந்து அணி தென்னாபிரிக்காவை விட 299 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது.

இந்த அணி சார்பாக -ஸ்ரைஸ் 170, கெயின்ஸ் 158, ஓரம் 90, மக்மிலன் 82, றிச்சட்சன் 48 ஆகியோர் கூடுதலாக ஓட்டங் களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் பொலக் 4, என்ரினி 3, கலிஸ், போஜி, ஸ்மித் மூவரும் தலா ஒவ்வொரு விக் கெட்டைக் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம் பிதத தென்னாபிரிக்கா, நேற்றைய ஆட்டநேர முடிவின்போது, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

249 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக் கள் என்ற நிலையில் இருந்த தென்னாபிரிக்கா, சடுதியாக நான்கு விக்கெட்டுக்களை இழந் தது. இதில் அணித் தலைவர் முதலாவது பந்திலேயே ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்ட மிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வணி சார்பாக கிப்ஸ் 61, றுடோல்ப் ஆட்டமிழக்காமல் 121 (இது அவரது மூன் றாவது டெஸ்ட் சதமாகும்), கலிஸ் 71 (இம் முறையும் இவர் டொன் பிரட்மனின் சாதனையை சமப்படுத்தத் தவறிவிட்டார்) ஆகியோர் கூடு தலான ஓட்டங்களைப் பெற்றனர். தற்போது பொலக் 5 ஓட்டங்களுடன் றுடோல்ப்புடன் இணைந்து ஆடிக்கொண்டிருக்கிறார்.

பந்து வீச்சில் முதல் இனிங்ஸில் ஆறு விக்கெட்டுககளைக் கைப்பற்றி தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப் படுத்திய மார்ட்டின், இரண்டாவது இனிங்ஸி லும் இதுவரை 4 விக்கெட்டுக்களைக் கைப் பற்றியுள்ளார். அத்துடன் ஓரம், மக்மிலன், இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர்.


கொலின்ஸ்

## இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் 2 ஆவது டெஸ்ட்:

# காலநிலை சீரின்மையால் ஆட்டம் இடைநிறுத்தம்!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக ரனிடாட்டில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட் டத்தில் இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக முதல்நாள் ஆட்டநேர முடி வின்போது, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டத்தின் போது, மிகுதி 2 விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மட்டும்பெற்றது.

காலநிலை சீரின்மை காரணமாக இரண் டரை மணித்தியாலமே காலை வேளை ஆடக் கூடியதாக இருந்தது. இதன்போது இங்கி லாந்து அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியின் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியது.

இவ்வணி சார்பாக கைல் 62, ஸ்மித் 35, சர்வான் 21, ஜேக்கப்ஸ் 40 ஓட்டங்களை கூடு தலாகப் பெற்ற அதேவேளை அணித் தலை வர் லாரா ஓட்டமெதுவும் பெறாமலும், இருவர் ஒவ்வொரு ஓட்டம் பெற்றும் ஆட்டமிழந்தமை யும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் ஹர்மிசன் 6 விக்கெட்டுக் களையும், ஹோஹாட் ஜோன்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, எட்டு ஓட்டங்களுக்குள் தனது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரை யும் இழந்தது. இதில் அணித்தலைவர் வோகன் ஓட்டமெதுவும் பெறாமலும், றெஸ் கோதிக் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் தற்போது புட்சர் 25 ஓட்டங் களுடனும் நசார் ஹீசைன் 20 ஓட்டங்களு டனும் களத்தில் உள்ளனர். இவர்கள் இரு வரும் இணைப்பாட்டமாக 46 ஓட்டங்கள் பெற் றிருந்த நிலையில் மீளவும் மழை வந்ததனால் ஆட்டம் குறித்த நேரத்திற்கு முன்னரேயே முடிக்கப்பட்டது.

பந்துவீச்சில் கொலின்ஸ், பெஸ்ற் இரு வரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப் பற்றியுள்ளனர்.



கோண்டாவில் இராமகிருஷ்ண இந்து மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலர் சுகுணாதேவி தெய்வேந்திரம் உரையாற்றுகிறார். அருகில் கல்லூரி அதிபர், நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## விளையாட்டு

# வடமராட்சி வலய மெய்வன்மை போட்டி!

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மெய்வன் மைப் போட்டிகள் கடந்த மாதம் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நெல்லியடி மத் திய மகாவித்தியாலய மைதானத்தில் நடை பெற்றன.

இப்போட்டிகளில் வடமராட்சி வலயத்திற் குட்பட்ட பெரும்பான்மையான பாடசாலைகள் பங்குபற்றின.

இப்போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் யாழ். மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்ற தாக அறிவிக்கப்பட்னர். (12)

# நெடுந்தீவு கோட்ட மெய்வன்மை போட்டி!

நெடுந்தீவுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சுவட்டு, மைதான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளை யும் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத் தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள் ளன.

இன்று 13, 15, 17 வயதுப் பிரிவுகளுக் கான போட்டிகளும் நாளை செவ்வாய்க்கிழமை 19, 21 வயதுப் பிரிவுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (113)

# தெல்லிப்பளை கோட்ட வலைப்பந்தாட்ட முடிவுகள்

தெல்லிப்பளை கல்விக் கோட்டத்திற் குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடை பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் முடிவு கள் வெளியாகியுள்ளன.

15 வயதுப் பரிவில் -

முதலாம் இடத்தை யூனியன் கல்லூரியும் 2 ஆம் இடத்தை குளமங்கால் மகாவித்தியால யமும் 3 ஆம் இடத்தை மகாஜனாக்கல்லூரி யும் பெற்றன.

17 வயதுப்பிரிவில் -

முதலாம் இடத்தை யூனியன் கல்லூரியும் 2 ஆம் இடத்தை மகாஜனாக்கல்லூரியும் 3 ஆம் இடத்தை அருணோதயாக்கல்லூரி யும் பெற்றன.

19 வயதுப்பிரிவில்

முதலாம் இடத்தை யூனியன் கல்லூரியும் 2 ஆம் இடத்தை மகாஜனாக்கல்லூரியும் 3 ஆம் இடத்தை மல்லாகம் மகாவித்தியாலய மும் பெற்றன.

# ஹொக்கி சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை யின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட மட்டத்திலான ஏழு பேர் பங்குகொள்ளும் ஹொக்கி சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

நான்கு பிரிவுகளாக மொத்தம் 12 கழகங் கள் மோதும் இந்தப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள் ளன.

இன்று பிற்பகல் 4 மணிக்கு பல்கலைக் கழக புளுவ் அணியை எதிர்த்து விஞ்ஞான விளையாட்டுக்கழக ஏ அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு கிராப் சொப்பர்ஸ் அணியை எதிர்த்து விஞ்ஞான விளையாட்டு பி அணி யும் பிற்பகல் 5 மணிக்கு ஓல் கோப்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாண கல்லூரி அணி யும் மோதவுள்ளன.


இப்போட்டிகள் யாவும் யாழ். பல்கலைக் கழக மைதானத்திலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்ட போட்டி!

யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண் கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி இன்று தொடக்கம் 24 ஆம் திகதி வரை பி.ப 4.00 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என விளையாட்டு துறை அதிகாரி றமணன் தெரிவித்தார். (72)

# பாகிஸ்தானைச் சேர்ந்த அத்வானியும் தனது பதவியை விட்டு விலகவேண்டும்!

## காங்கிரஸ் பிரமுகர் தெரிவிப்பு



பாகிஸ்தானை சேர்ந்த அத்வானி துணைப் பிரதமர் பதவியை ராஜினமா செய்யவேண்டும் என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனார்த்தன பூஜாரி வற்புறுத்தியுள்ளார்.

மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜனார்த்தன பூஜாரி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது -

கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி நடத்திய விஜய துந்துபி (வெற்றிமுழக்கம்) யாத்திரைக்கு மக்கள் வரவேற்பு அதிகம் இருந்தது.

காங்கிரஸ் கட்சிதான் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்று மக் களின் எண்ணம் உள்ளது.

யாத்திரைக்கு கிடைத்த வெற்றியை பார்க்கும்போது காங்கிரஸ் முழுவெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. 173 இற்கும் அதிகமான இடங்களை சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கைப்பற்றும்.

சோனியா காந்தியை வெளிநாட்டவர் என்று பா.ஜ.கவினர் பிரசாரம் செய்கிறார்கள். அப்படியானால் துணை பிரதமராக பதவி வகித்துவரும் அத்வானி இந்திய நாட்டைச் சேர்ந்தவரா?

அவரே நான் பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் பிறந்தேன். கராச்சி என்னை மிகவும் கவர்ந்துள்ளது என்று கூறியுள்ளார். அப்படி பார்க்கும்போது அத்வானிக்கு இந்தியா மீது அக்கறை இல்லை. சோனியா காந்தி வெளிநாட்டவர், ஆகையால் அவர் பிரதமர் பதவிகCு வரக்கூடாது என்று சொல்லும் அவர்களுக்கு நான் தக்க பதிலடி கொடுக்க விரும்புகிறேன்.

பாகிஸ்தான் நாட்டில் பிறந்த அத்வானிக்கு துணை பிரதமர் பதவியையும் உள்துறை பதவியையும் வகிக்க தகுதியில்லை ஆகவே அவர் பதவி விலக வேண்டும்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பிற்கு எதிராக ஒரு நேரத்தில் பா.ஜ.கவினர் பேசி கொண்டிருந்தனர்.

ஆனால்இன்று முஷாராப் போன்ற தோற்றம் உடையவர்களிடம் வாக்குக்காக உதவியை நாடி உள்ளனர் என மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனார்த்தன பூஜாரி கூறினார்.

# நடிகை விஜயசாந்தி ராயலசீமாவில் போட்டி



ஆந்திராவில் ராயலசீமா பகுதியில் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளராக போட்டியிட நடிகை விஜயசாந்தி விருப்பம் தெரிவித்துள்ளார்.

பிரபல நடிகை விஜயசாந்தி பாரதீய ஜன தாக்கட்சியின் தேசிய மகளிர் பிரிவு துணைத் தலைவராகப் பதவி வகித்து வருகிறார். ஆந்தி ராவின் ஒரு பகுதியை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்று நடிகை விஜயசாந்தி கூறிவந்தார்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி நடிகை விஜயசாந்தி ராஷ்ட்ரிய சமீதி கட்சியில் சேர் வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் சமீபத்தில் தெலுங்கானா மாநில பிரச்சினையை பல கட்சிகள் கைவிட்டு விட்ட தால் விஜயசாந்தியும் இது தொடர்பாக அமைதி காத்து வந்தார்.

சமீபத்தில் விஜயசாந்தி மீண்டும் பாரதீய ஜனதாக்கட்சியை ஆதரித்து பல கூட்டங்களில் பேசினார். தீவிர தேர்தல் பிரசாரமும் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில் நடிகை விஜயசாந்தி தெலுங்கானா பகுதியில் பாரதீய ஜனதா வேட்பாளராக போட்டியிட இடம் கொடுக்கப்பட்டது என்று ஆந்திர அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இது குறித்து விஜயசாந்தி ஹைதராபாத்தில் நிருபர்களிடம் கூறியதாவது -

தெலுங்கானா பகுதி பிரச்சினைக்குரிய ஒரு இடமாக இருந்து வருகிறது. அந்தப் பகுதியில் நான் பாரதீய ஜனதா வேட்பாளராக போட்டியிட விரும்பவில்லை.

நான் ராயல சீமா அல்லது ஆந்திர கடற்கரை மாவட்டங்களில் உள்ள ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட விரும்புகிறேன். நான் எந்தத் தொகுதியில் போட்டியிடவேண்டும் என்பதை கட்சியின் மேலிட முடிவுக்கே விடுகிறேன் எனத் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### நகைக்கடை உடைத்து திருட்டு

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவிலடியிலுள்ள நகைக் கடையில் கடந்த வெள்ளிக்கிழமை திருட்டு இடம்பெற்றுள்ளது.

வழமைபோல கடை உரிமையாளர் கடையைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும், மறுநாள் கடையைத் திறக்கச்சென்றபோது கதவுகள் உடைக்கப்பட்டிருந்தாகவும், அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், வெள்ளி ஆபரணங்கள் என்பன திருட்டுப்போயுள்ளது. இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (101)

### திருமண மண்டபத்தில் திருடியதாக சந்தேகநபர் கைது

குருநகர் பகுதியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றி இருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்களைத் திருடியவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

குருநகர் பகுதியில் உள்ள திருமணமண்டபம் ஒன்றில் - ஒலி, ஒளி பதிவு செய்யும் மின்சார உணகரணங்கள் பல சென்ற மாதம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக, திருமணமண்டப உரிமையாளர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, சந்தேகத்தின் பேரில் - பொலிஸார் ஒருவரை தேடி வந்தனர். இவரைக் கடந்த வியாழக்கிழமை முகமாலைச் சோதனைச்சாவடியில் வைத்துப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர் - யாழ் மாவட்ட நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கவிஞராகவும் சிறந்த பாடலாசிரியராகவும் கவிஞர் அம்புலி பரிணமித்துள்ளார்

## வெளியீட்டு விழாவில் புதுவை இரத்தினதுரை

நல்ல கவிஞர்கள் எல்லோரும் நல்ல பாடலாசிரியர்கள் அல்ல. அதேபோன்று நல்ல பாடலாசிரியர்கள் எலலோரும் நல்ல கவிஞர்கள் அல்ல. இரண்டும் கைவரப் பெற்றவர்களும் இருக்கின்றார்கள்.

இந்த இரு பரப்புக்களிலும் கால் பதித்து, கணிசமான உயரத்தில் இருப்பவர் தான் உதயலட்சுமி என்னும் கவிஞர் அம்புலி என - கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

யாழ்.நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற கவிஞர் அம்புலியின் - "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" கவிதை நூல் அறிமுகவிழாவில் கலந்து கொண்டு, உரையாற்றுகையிலேயே இந்தக் கருத்தினை அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் -

இந்த நூல் ஒரு நீண்டகாலத் தயாரிப்பு. எம்முடன் இணைந்து இந்த நூலிலும் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தது. இந்நூலின ஆசிரியை அம்புலி ஏற்கனவே அறியப்பட்டவர்தான். தலைசிறந்த பாடலாசிரியராக, விவரணச்சித்திரக்காரி எனப் பல அவதாரங்களை எமது விடுதலை அமைப்பிலும், விடுதலைமையங்கொண்ட பிரதேசங்களிலும் எடுத்துள்ளார்.

அவருடைய பாடல்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இவருடைய பாடல்கள் உணர்வுகளுக்குள் இளையோடும் வகையில் பிரபல்யம் பெற்றவை. "அலையே நீயும் பொங்காதே என் இலக்கை நீயும் மறைக்காதே" என்ற பாடல் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இவர் பல பெயர்களிலே படைப்புக்களைச் செய்து கொண்டிருப்பவர். அம்புலி, உதயலட்சுமி, அணங்கு, அரியாப்பை, மருகி, கங்கை, சாரங்கா எனப் பல பெயர்களிலே கவிதை எழுதுபவர். இவ்வாறு எழுதும்போது, சில சமயங்களிலே இவர்களது சில படைப்புக்கள் பிரபலமான பெயர்களிற்குள் உள்ளடக்கப்படுவதில்லை.

எமது தேசியத்தலைவர் இந்நூலின் ஆசியுரையிலே ஒரு குறிப்பைக் குறிப்பிட்டுள்ளார். கவிதை எழுதுவதற்கு கற்பனை வளம் மட்டும் போதாது, இதற்கு நிறைந்த அறிவும் இருக்கவேண்டும். அந்த அறிவைக் காலத்தோடு ஒட்டிச்செல்லும் ஆற்றல் இருக்கவேண்டும். அதற்கு அழகான வடிவம் கொடுக்கின்ற கலைத்திறன் இருக்கவேண்டும். அதை உணர்வின் வரிகளாக வடிக்கும் கவித்திறன் இருக்கவேண்டும். இவற்றை தனது தேசவிடுதலைக்காகத்தான், சார்ந்த மக்களின் விமோசனத்திற்கும் பயன்படுத்துகின்ற உயர்ந்த குறிக்கோள் இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனது கருத்துப்படி இத்தொகுப்பில் அம்புலியின் பக்கத்தில் ஒரு பகுதிக்கவிதையும் இடம்பெறவில்லை. பல பத்திரிகைகள் ஊடாக கவிதைகள் தந்தவர் அம்புலி. இவருடைய கவிதைகளை வாசிக்கும்போது, இக் கருத்தினைக் கூறுவதை நான் தவறிவிட்டேனோ என்கிற ஆதங்கம் எனக்கு ஏற்பட்டது.

நாம் சொல்வதற்கு வந்து சொல்லமுடியாமல் தவிக்கும் விடயங்களை இலாவகமாக சொல்லிவிடுபவர் உதயலட்சுமி. இவரது கவிதைகளைப்பார்த்து நான் சிலிர்த்துப் போயுள்ளேன்.

உதயலட்சுமியின் கவிதைகளை வாசிக்கும்போது, புதுக்கவிதை என வரம்பு கட்டினாலும் இதற்குள் உரத்த வாசிப்பு முறை ஒன்றுள்ளது. "யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை. குண்டு மழைக்குளிப்பில், குருதி உறைந்த வீதிகளில், பிணவாடை கலந்த சுவாசிப்புக்களில் வெறுப்படைகின்றேன்" எனத் தொடங்கி " அதன் கால நிர்ப்பந்தத்திலே என் கோலம் மாற்றம் அடைந்தது" என முடியும் கவிதை.

இந்தச் சந்ததி ஏன் போராடவேண்டி ஏற்பட்டது என்பதை துல்லியமாகக் காட்டிவிடுகின்றது. நாம் யுத்த வெறியர்கள் அல்ல. ஆனால், நிர்ப்பந்தத்தால் நாம் நகர்த்தப்பட்டோம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது இக்கவிதை. இந்தப் போராட்டத்திற்குள் நுழைந்தவர்கள் முன்னேயும் ஒரு கேள்வியுண்டு. அந்தக்கேள்வி இதுதான் - "வெறிச் சோடிப்போன வீதிகளிலும், குண்டுகளின் அதிர்வோசை கேட்காத ஒரு தேசத்தை இங்கே தேடுகிறேன" எனத் தொடங்கும் ஒரு கவிதை இதற்கு ஒரு சான்றாகும்.

இவரது கவிதை போராட்டத்திற்கான ஒரு அறைகூவல் அல்ல. போராட்டத்தில் தம்மை கரைத்தவர்களின் ஏக்கக்குரல், அவர்களது உண்மைக்குரல் இவைகள் வித்தியாசமான கவிதைகள். நான் இங்கு வந்து ஆண்டொன்றாகிறது.

"காட்டுப் பூக்களை ரசித்து, கண்சிமிட்டும் விண்மீன்களை கணக்கெடுத்து" எனத் தொடங்கும் கவிதை "ஒரு நகரவாழ்வின் சுவாசிக்கப் பயந்த மனிதர்களை விட, நான் இங்கு நலமாக உள்ளேன்" எனமுடியும் இடம் க்விதையின் உச்சம். இத்தகைய கவிதைகளை உதயலட்சுமியினாலே மட்டும் எழுதமுடியும் எனத் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### திறப்பு விழாவும் தளபாடங்கள் கையேற்றலும்

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஜி.ரி.இசற் உதவியுடன் கட்டப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழாவும், தளபாடங்களைக் கையேற்றல் நிகழ்வும் - நாளை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.சண்முககுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு - யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும், கல்வித்திணைக்கள பொறியியலாளர் கு.சிவபாலன், ஜி.ரி.இசற் நிறுவன பொறியியலாளர் யோ.தயாபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.(101)

### மதுபான விற்பனையால் மக்கள்பெரும் சிரமம்

புளியங்கூடல் சந்திப்பகுதியில் மாலை வேளைகளில் நடமாடும் விற்பனை நிலையங்கள்மூலம் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதி மக்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதாவது, இந்தச் சந்தியில் மாலைவேளையில் அதிகளவிலான ஒன்றுகூடும் மதுப்பிரியர்களுக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் மதுபானங்களை எடுத்துவந்து விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால், அபபகுதியில் மாலை வேளைகளில் மதுவெறியர்களின் அட்டகா சங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும், அப் பகுதியால் பயணிக்கும் பயணிகளுக்கும் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இந்த விடயம் தொடர்பாக உரியவர்கள் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைளை எடுக்வேண்டும் என மக்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். (44)



யாழ்.ஜோன் பொஸ்கோ பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு விழா - நேற்று நடைபெற்றபோது, அதில் எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

# மிதிவெடி அடையாள கம்பங்கள் விசமிகளால் அகற்றப்படுகின்றன

வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபடுவோர் அடையாளப் படுத்தும் பொருட்டு நடும் தடிகளை - சிலர் அகற்றுவதால், பொது மக்கள் பாதிபபுக்குள்ளாகும்நிலை தோன்றியுள்ளது என - டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவின் வடமராட்சிப் பிரதேசத் தலைவர் ஜோசப் பிரேம்குமார் தெரிவித்தார். கற்கோவளம் பகுதியில் டெனிஸ் வெடிபொருள் செயற்பாடுகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

வடமராட்சியில் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்ட பலரைக் காணமுடிகிறது. அவர்கள் தம்மைப்போல் பிறரும் பாதிப்படையக்கூடாது என்கின்ற ஆதங்கத்தில் வெடிபொருள் அகற்றப்படும் பணியை வரவேற்பதுடன், எமக்கு ஒத்துழைப்பையும் வழங்கிவருகின்றனர். ஆனால், சிலர் குறுகிய சுயநல நோக்கத்தோடு, டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவினரான எமது அமைப்பின் பணியாளர்களால், அடையாளத்திற்காக நடபபடும் தடிகள், அறிவித்தல் பலகைகளை வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர்.

இதனால், வெடிபொருள் உள்ள இடங்களை அடையாளப்படுத்தல், வெடிபொருள் அகற்றப்பட்ட பிரதேசங்களை அடையாளப்படுத்தல், முதலான பணிகளை மீண்டும் மேற்கொள்ளவேண்டி ஏற்படுவதுடன், இவற்றிற்கு மேலும் வீணான நேரங்களையும் செலவு செய்யவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு வெடிபொருட்கள் உள்ள பகுதிகளில் இருக்கும் அடையாளங்களை அகற்றுவதால், எதிர்பாராமல் அந்தப் பகுதிக்கு வரும் யாரேனும் - வெடிபொருள் இருப்பதை உணராது, அந்தப் பகுதிக்குள் உள்நுழைய முற்படும் போது, அவர்கள் வெடிவிபத்துக்குள்ளாக நேரிடுகிறது. இத்தகைய நிலையை கருத்திற்கொண்டு - கற்கோவளம், பருத்தித்துறைப் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றும் எமது பணியாளர்களுக்கு பொது மக்கள் உதவவேண்டும்.

வெடிபொருட்கள் அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் தங்குமிடம், பணிபுரியும் இடம் முதலானவற்றில் அந்தப் பகுதிவாழ் மக்கள் மலசலம் கழிப்பதாலும், பணியாளர்களுக்கு பெரும் இடையூறு ஏற்படுகின்றது.

இந்தப் பகுதி மக்களின் பாவனைக்காக மேலும் ஒரு தொகுதி நிலப்பிரதேசம் விரைவில் பொது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# நுண்கலைத்துறை மாணவன் சாகும்வரை உண்ணாவிரதம்

## இன்று முதல் ஆரம்பம்

இராமநாதன் நுண்கலைக் கழக சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியை நிறைவு செய்த மாணவன் ஒருவன் - சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று முதல் மருதனார்மடத்தில் அமைந்துள்ள நுண்கலைக் கழகத்தில் மேற்கொள்ளவுள்ளார். இது பற்றி தெரியவருவதாவது -

இறுதியாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளில் இடம்பெற்ற பழிவாங்கல் முயற்சிகளையும், குறித்த விரிவுரையாளர் தனது பதவியை தக்கவைப்பதற்காக திறமையான மாணவர்களைப் பழிவாங்கியது தொடர்பாகவும் - பாதிக கப்பட்ட மாணவனால் இன்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இதற்கு மாணவர்கள் சார்பில் ஆதரவுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவன் இமமுறை மார்ச் 27 ஆம் திகதி இடம்பெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற இருப்பதுடன், சித்திரமும் வடிவ்மைப்பும் துறையில் முதலாவது பகுதி மாணவர்களிலே இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (91)

# தென்னை உற்பத்தியாளர் சங்கத்தினரை யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சந்தித்தார்

யாழ்.மாவட்ட தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபாலவுககும் இடையிலான சந்திப்பு கொடிகாமத்தில் நடைபெற்றது. கடந்தவாரம் கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள தென்னந்தோட்டங்களின் நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் - யாழ்.குடாநாட்டிலுள்ள தென்னந்தோட்டங்களில், புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பகுதிகளில் மீளக்குடியமர்வதுகுறித்தும், யுத்த நடவடிக்கைகளின்போது, சேதமடைந்த மரங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறிதது அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

மேலும், தென்னை மரங்கள் வெட்டுவதைத் தடைசெய்தல் மற்றும் மீளநடுகை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

தென்னந்தோட்ட உரிமையாளர்கள் தமது தோட்டங்களில் மீளக்குடியமர அனுமதிப்பது தொடர்பாக உரிமையாளர்கள் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தால் அதுகுறித்து ஆராயப்படும் எனப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் 51, 55 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, அந்தப் பிரதேச படை அதி காரிகள், தெங்கு அபிவிருத்தி சங்க தலைவர் ஏ.நல்லதம்பி, தெங்கு அபிவிருத்திச் சபை பிரதேச முகாமையாளர் எஸ்.சிவச்சந்திரன் மற்றும் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் என 20 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் காணிகள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக - விண்ணப்பங்களை சுசில் சந்திரபால உரிமையாளருக்கு வழங்கியதுடன், விண்ணப்பங்களை விரைவாக பூர்த்திசெய்து ஒப்படைத்தால், அதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என - யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவித்ததாக பலாலி இராணுவத்தலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டது.

### நிர்வாகிகள் தெரிவு

நந்தாவில் மனோன்மணி சன சமூக நிலைய புதிய நிர்வாகத் தெரிவு - அண்மையில் இடம் பெற்றது. தலைவராக ந.ஐங்கரனும், செயலாளராக கு.ஜனார்த்தனனும், பொருளாளராக சி.அஜிந்தனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (111)




"அம்மா தாயே காளி ஆச்சி ...

மாரி அம்மா ... இன்றைக்கு மழைபெய்யக் கூடாது." இராசம்மா தனக்குத் தெரிந்த தெரியாத தெய்வங்களையெல்லாம் மனதிற்குள் மன்றாடிக் கொண்டாள். வானத்தில் மேகத்தின் கருவைக் கலைக்க காற்று போராடிக்கொண்டிருந்தது. அதன் பயனாய் ஆங்காங்கே சிறு மழைத்துளிகள் தூற ஆரம்பித்திருந்தன. வறண்ட செம்பாட்டு மண்ணில் வீழ்ந்த மழைத்துளிகளால் புழுதி மெல்லமெல்ல மேற்கிளம்ப... அதன் இதமான வாசம் காற்றோடு கைகோர்த்துக் கொண்டது. அம்மண்வாசனையை நெஞ்சுநிமிர்த்தி... தலையைத் தூக்கி... சுவாசத்தை உள்ளிழுத்து அனுபவிக்கும் நிலையில் அவள் இல்லை. ஆனாலும் அவ்வாசம் அவளது மூக்குத் துவாரத்தையும் தாண்டி இதயம் வரை சென்று நனைத்துக் கொள்ள, நெஞ்சுரணமாய் வலித்தது. அவ்வலியின் வெளிப்பாடாய் கண்களின் ஓரம் கசிந்த கண்ணீர்த்துளியில் உப்புக்கரித்தது.

மாரி காலத்தில் மழை புதிதாகத் தூறலடிக்கும் போதெல்லாம்.. அவள் புருஷன் வேலப்பன் அவள் அருகில் நெருக்கமாக வந்திருந்து தனது மூச்சுக்காற்றை அவளது காதோரம் படரவிட்டு...

"அடிபுள்ளே புதுப்பெண்ணுக்கும் புழுதிமண்ணுக்கும் ஒரு இது இருக்குதடி இரண்டுமே...."

என வார்த்தையை முடிக்காது சிலிமிசமாய்ச் சிரிப்பான். அவனின் வார்த்தை ஜாலத்தில் உறவின் நெருக்கத்தில் அவள் ஒவ்வொரு முறையும் புதுப்பெண்ணாய் உலகை மறந்தே போவாள். அவனது வியர்வையும், வெற்றிலைக் காவி, பீடி, கள்ளு என முப்பொருளும் கலந்த மணமும் அவளுக்கு சுகமாகவே இருக்கும்.

# ஏன் சிரித்தாய்?

இன்று...

மழை பொழிகிறது...!

மண் மணக்கிறது....

ஆனால் அவன் .....?

அவள் வாழ்க்கைக்கு விடையாக இருந்தான். 'இன்று கேள்விக் குறியாகி எங்கோ...? விடை தெரியாத தூரத்திற்கப்பால்...

அப்பாலுக்கும் அப்பால் அடிசேர்ந்துவிட்டான்.

ஆயிரம் காலப்பயிர் ஒன்பது வருடங்களோடு அடிசாய்ந்துவிட்டது. யுத்தம் அவனது உடலை விழுங்கிவிட்டது. உயிரைப் பருகிவிட்டது.

அவளுக்கு விதவைப் போர்வையைத் தானமாக்கிவிட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மீசாலை, மட்டுவில் எனச் சனம் இடம்பெயர்ந்து ஓடியது ஒரு காலம். பிறகு அங்கிருந்த சனம் யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்தது ஒரு காலம். அப்படி மீசாலையில் இருந்து உள்நாட்டு அகதிகளாய் கதியற்று ஓடிவந்தவர்கள் தான் இராசம்மாவும் வேலப்பனும். அவர்களது இரு சின்னஞ்சிறு பிள்ளைகளும்...

போதாக்குறைக்கு அவள் வயிற்றில் இன்னுமொன்றும் முளைவிடத் தொடங்கியிருந்தது.

திடீரெனப்பாய்ந்து வந்த ஷெல்லடிக்கும், பொம்மர் குண்டுத் தாக்குதலுக்கும் பயந்து நிறைமாதக் கர்ப்பிணியான அவள், கணவனுடனும் பிள்ளைகளுடனும் கையில் அகப்பட்டதையெல்லாம் சுருட்டி உரப்பையில் இட்டுக்கொண்டு ஓடிவந்ததை எப்படி மறப்பது?

வளர்த்த சாவல்களும் கோழிக்குஞ்சுகளும் திக்கொன்றாய் சிதறியோட ஆசையாய் வளர்த்தகடா குண்டடிபட்டு கண்முன்னே துடிதுடித்து இறந்ததை எப்படி மறப்பது? குடிசை வீடானாலும் சொந்த வீட்டைத் துறந்து... சொந்தங்கள் சிதறிப்போக உயிரைக் கையில் பிடித்தவாறு தொண்டைக் குழித் தண்ணீர்வற்ற ஓடிவந்ததை எப்படி மறப்பது?

வந்தும் என்ன பயன்...?

" அடிபுள்ளை முந்தி இந்த யாழ்ப்பாணத்தவை எங்கடை இடத்துக்கு வந்தபோது நாங்கள் எப்படியெல்லாம் அனுசரிச்சோம். இவேள் இப்ப தங்கட புத்தியைக்காட்டிப் போடடினம்..."

வேலப்பன் அவளிடம் அடிக்கடி சொல்லி அரற்றினான். நிர்க்கதியாய் வந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களை விட வேடிக்கை பார்த்தவர்கள் தான் அதிகம். ஏதோ வெளிநாட்டு நிறுவன உதவியுடன் பாடசாலை ஒன்றின் ஒதுக்குப்புறமான பள்ளக்காணிக்குள்ளே குடில் ஒன்றும் போட்டாகிவிட்டது.

வருமானத்திற்கு எங்கே போவது? பிழைப்புக்கு என்ன வழி? அடுத்த கேள்வி விஸ்வரூபமெடுத்தது.

ஊரில் இருந்தால் அவன் நாலு பனையேறி கள்ளு இறக்கி விற்றிருப்பான்.

அவள் ஆடு, கோழி வளர்த்து சீவனத்துக்கு பொருள் தேடியிருப்பாள். அன்றாடச் சீவியம் சுகமாய் நகர்ந்திருக்கும். இரண்டு நாள் எங்கெங்கோ அலைந்து விறகு கொத்தி நாலு காசு கொண்டு வந்தான். அந்தப் பணமும் தீர்ந்தாகிவிட்டது. குழந்தைகள் 'அம்மா பசிக்குது' என முனக ஆரம்பித்துவிட்டன. ஏதேதோ சமாதானம் சொல்லி கஞ்சி காய்ச்சிக் கொடுத்து ...

கஞ்சிக்கான அரிசியும் தீர்ந்துவிட்டது. எதை நிறுத்தினாலும் பசியை நிறுத்திவிட முடியுமா? மூத்தவனுக்கு ஏழு வயது, கண்களைக் கசக்குகிறான். நாலு வயது இளையது தாயின் தாவணியை இழுத்துத் திருகி அழுகிறது. கணவன் மனைவி இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

என்ன செய்வது...?

:வேலப்பன் ஒன்றும் சொல்லாமல் திடீரென எழுந்து வெளியே சென்றான். அரை மணிநேரத்தில் திரும்பி வந்தவனின் முகத்தில உறுதி தென்பட்டது.

அடி புள்ளே இராசம் இப்படியே இருந்தா ஒண்ணும் பண்ணேலாது. நான் எங்கட பக்கத்து வளவு இளையாம்பியைக் கண்டனான். அவனோட ஊருக்குப் போகப்போறன்"

" என்ன ...?" அதிர்ந்து போனாள்.

உங்களுக்கென்ன அறளை பேந்து போட்டுதே?"

"என்னைத் தடுக்காதே புள்ளே, கொடிகாமப் பகுதியில தானாம் செல்விழுகுதாம். ஊர்ப்பக்கம் பிரச்சினை ஓய்ந்திட்டுதாம். ஊருக்கை போனால் வளவுக்க நிக்கிற தேங்காயை புடுங்கிக் கொண்டு வந்திடுவன். எப்படியும் எண்பது எழுபது தேங்காய் தேறும். நல்ல காசுக்கு வித்திடலாம்"

என்று சொன்னான். அவளது பதிலை எதிர்பார்க்காது பிள்ளைகள் இரண்டினதும் தலையை ஆசையாய்த் தடவிவிட்டு மனைவியின் கையைப் பற்றி உள்ளங்கையை இறுக அழுத்தி "என்ர ராசாத்தி எப்பவும் நீ அழகு தானடி..." என ஆசையாய்ச் சொல்லிவிட்டு ஆழமாகப் பார்த்தான். அப்பார்வையில் ஏக்கம், தாபம், பரிவு, சோகம எனப் பல கலவை கலந்திருந்தது.

"பிள்ளை... பிள்ளையளைக் கவனமாப் பார்த்துக்கொண்டு நீயும் பிள்ளைத்தாச்சிப் பொண்ணு கவனமாய் இரு" எனக் கூறிவிட்டு வேகமாய் வெளியேறிவிட்டான்.

வழியனுப்பி வைத்திருக்கும் மாலைநேரமே செய்தி இடியென வந்திறங்கியது. பூமி பிளந்து விழுங்கியது போல துடிதுடித்துப் போனாள். எங்கெங்கோ ஓடி யார்யாற்றையோ காலெல்லாம் விழுந்தும் கதறியும் புரண்டும் ஒரு பயனும் இல்லை. அவனது உடலைத்தானும் அவளால் பார்க்க முடியவில்லை.

"உவரேன் உதுக்கை போனவர்? பிரச்சினை எண்டு தெரியாதே"

"ஓமோம் அங்கினேக்க போனா ஆற்றையும் தாலி வாளிகளை அறுக்கலாம்... சாமான் சக்கட்டுக்களை அள்ளிக் கொண்டு வரலாம். கள்ளப் பயல் ... கடவுள் இருக்கல்லே அதான் தண்டிச்சிடுச்சு"

"உங்கினைக்கே ஊரில அஞ்சாறு வீட்டில களவு போனதுக்கும் உவன்தான் கெட்ட ராஸ்கல் காரணமாய் இருக்கணும்."

"உதுமட்டுமே கோயில் வழியச் சிலைகள், யந்திரங்கள் களவு போச்சுதே. உதுக்கு உந்த முகாம் சனியன்தான் காரணமாய் இருக்கும்...."

"உந்த பிரின்சிப்பல் உலக்கையனுக்கு முதல்ல வெளுக்க வேணும். உவன்தான் உதிலை முகாம்போட இடம்கொடுத்தவன்."

வாய்க்கு வந்தபடி ஓரகம் பேசும் சனங்களின் வார்த்தைகளால் இராசம்மா 'சகடைக்காலில் அகப்பட்டது போல" துடிதுடித்துப் போனாள்.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே தாழ்த்தப்பட்ட சாதி எப்பொழுதுமே சபிக்கப்பட்ட சாதி. அதுவும் முகாமில் இருந்துவிட்டால் இன்னும் சொல்லத்தேவையில்லை. சமூகத்தில் கொலை நடந்தாலும், கொள்ளை நடந்தாலும், அடாவடித்தனம் செய்தாலும் எல்லாமே இந்த 'முகாம் சனியன்கள்' தான் என முத்திரை குத்தப்பட்டுவிடும்.

யாரை நோவது படைத்தவனையா?

இச்சம்பவத்திற்குப் பிறகு அவள் எத்தனையோ வேதனைகளை, சோதனைகளைத் தாண்டி வந்துவிட்டாள். ஒரு பெண் கல்யாணம் செய்யாமல் தனியாகக் கூட வாழமுடியும்.ஆனால் இளமையில் தாலியை அறுத்து வாழ்தல் 'என்பது மகா கொடுமை என்பதை சமூகம் அவளுக்கு நன்றாகவே படிப்பித்திருந்தது

யார்யாற்றையோ... எத்தனையோ.. ஏச்சுக்கள் பேச்சுக்கள்.. கீழ்த்தரமான பார்வைகள்... பக்கத்து குடிசைக்காரனின் பேச்சுக்கள்... இரவில் கதவைத் தட்டிப் போட்டு ஓடுவதும்... கூரைக்குக் கல்லெறிவதும்.. மூரிமட்டைச் சுவர் இடுக்கால் நோட்டமிடுவதும்... அவள் கூனிக்குறுகிப் போவாள்.

'கொண்டவன் இல்லாதகுறை இன்னும் அதிகமாய் வலித்தது'

படீர்.. படீர் எனக் கீழ்த்திசையில் காதைப்பிளக்கும் இடி முழக்கம்.. கண்ணைப் பறிக்கும் மின்னல். இவற்றால் பழைய நினைவுகளில் இருந்து மீண்டவளான இராசம்மா, மேற்கூரைப் பொத்தல்களினூடாக மழை ஒழுக ஆரம்பித்திருந்ததையும், இளைய பையன் கைகளால் மழைநீரை ஏந்தி ஏந்தி விளையாடி குடிசை முழுப்பகுதியையும் ஈரமாக்குவதையும் கண்டாள். வெளியே மழை சோனாவாரியாகக் கொட்டிக்கொண்டிருந்தது. மண்ணோ வெள்ளத்தைச் சுமப்பதற்காக இளகிக்கொண்டிருந்தது.

அம்மா.. தாயே .. காமாட்சி மழை பெய்யக்கூடாதம்மா இந்தப் பள்ளக்காணியிலே வெள்ளம் வந்தால் அண்டலிக் கேலாது தாயே... நாதியற்ற அநாதை நான்... குழந்தைகளோடை எங்கே போவன்...? உனக்கு பொங்கலிடவோ.. அவிச்சுக்கொட்டவோ வழியில்லா ஏழைநான். கஞ்சியாவது ஊத்துறன் காப்பாத்து தாயே என மன்றாடியவள் மழையின் வேகத்தைப் பார்த்து அழத்தொடங்கினாள்.

அவளது பிரார்த்தனையைக் கேட்டோ என்னவோ மழை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து தூவாணமடித்தது.

.பெருந்த நிம்மதியுடன் கண்களில் வழிந்த கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள்.

அம்மா அம்மா.. பசிக்குதம்மா"

வெளியே மழையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மூத்தவன் இராசையா, தாயின் அருகில் வந்து தோளை இடித்தவாறு கெஞ்சத் தொடங்கினான்.

ஏழையளாய்ப் பிறக்கக்கூடாது. தலைவிதியாய் தொடரும் பிரச்சினைகள்.. ஒரு பிரச்சினை போய் இப்ப அடுத்த பிரச்சினை வயிற்றுப் பிரச்சினை...

அரிசி போட்டுவைக்கும் பானை வெறுமையாய்க் கிடந்தது. என்ன செய்யலாம்... அவளுடைய மூளையில் ஒரு பொறி தட்டுப்பட்டது.

பக்கத்தில் உள்ள சிவகாமி அம்மன் கோயியில் இன்றைக்கு அன்னதானம். இன்றைக்கா? நாளைக்கா? இன்றைக்கு! கூரைக்குள் செருகி வைத்திருந்த 'சொப்பிங் பாக்கை ' எடுத்து உதறியவள் "ஐயா ராசு இண்டைக்கு கோயிலிலை அன்னதானமாம்.. சோறு காய்ச்சிக்கொடுப்பான்கள் கெதியாய்ப் போனாய் எண்டால் வாங்கி வரலாம்..." என்று மூத்தவனை அழைத்தாள். இராசையாவுக்குக் கோயில் ஒன்றும் புதிதில்லை. அவனைப் போன்ற சிறுவர்கள் கோவில் வீதியிலை விளையாடுவதை ஓரமாய் நின்று பார்த்திருக்கிறான்.

தாயிடம் பையை வாங்கி.. இரண்டு கைகளையும் முறுக்கி ஊர்ரென சத்தமிட்டவாறு வேகமாக ஓடத்தொடங்கினான். மோட்டார் சைக்கிள் ஓடும் பாவனை... 'கெதியாய்ப் போனால் வெளிவாசலில் முதலிடம் பிடிக்கலாம், சுடு சோறும் கிடைக்கும் அவனுக்குள் நப்பாசை எழுந்தது.

"பார்த்துப்போடா.. அங்கினேக்கை பொடியளோடை சண்டைகிண்டை போட்டுடாதை" பின்னாலிருந்து கேக்கும் தாயின் குரலைக் காதில் வாங்கிக்கொள்ளாது, வேகமாக ஓடிக் கோவில் வாசலில் வந்து நின்றான். வாசலில் இரண்டொரு பையன்கள் தான் இருந்தனர். போய் அவர்கள் அருகில் உட்கார்ந்தான். உள்ளே அம்பாளுக்கு பூசை நடந்து கொண்டிருந்தது. சமையல் வாசனை மூக்கைத் துளைத்தது. எச்சிலைத் தொண்டைக்குள் அடக்கிக்கொண்டு மென்று விழுங்கினான்.

ஒலிபெருக்கியில் யாரோ மகேஷ்வர பூசையின் மகத்துவம் பற்றியும், ஏழைகளுக்கு உணவளிக்கவேண்டிய அவசியம் பற்றியும் விலாவாரியாகப் பேசிக்கொண்டிருந்தார். இன்றைக்கு அன்னதானம் செய்பவரின் பெருமையையும் அடிக்கடித் துதிபாடினார்.

டாங்.. டாங் .. பன்னிரண்டு மணி! ஆலயக் காண்டாமணியின் ஓசை கேட்டதுதான் தாமதம் - காகங்கள் போல நாலாபுறமிருந்தும் பொடி, பொட்டைகள் ,குஞ்சுகுருமான்கள் எல்லாம் வந்து முண்டியடிக்க இராசையா தூரத்துக்கு எங்கோ தள்ளப்பட்டான்.

அவிழ்ந்துபோன தனது காற்சட்டையை வயிற்றை எக்கிக் கட்டியவாறு இது என்ரை இடம்... நான்தான் முதலில் வந்தனான்" தான் முதலில் இருந்த இடத்தில் போய்நின்று நின்றவனைத் தள்ளியவாறு கூறினான்... கூறியதுதான் தாமதம்,

"டேய்... உவனைப் பாருங்கோடா... யாற்றை இடத்திலை யார் வந்து சொந்தம் கொண்டாடுறது. "முகாம் பயலுக்கு திமிரைப் பாரடா பரதேசி நாய்"

ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்து அவனைத் தள்ள தூரப்போய விழுந்தான்.

விழுந்த வேகத்தில் காற்சட்டை கழன்று, பையும் கிழிய... எல்லோரும் கைகொட்டிச் சிரிக்க... அவமானம் வெட்கம், வேதனை அவனைப் பிடுங்கித்தின்ன கண்களில் கண்ணீர் தளும்பியது.

"சரி சரி அழாதை வந்து நில்லு?? இரக்கப்பட்டு ஒருவன் இராசையாவை அருகில் அழைத்துக்கொண்டான். வரிசையின் நெருக்கம் வரவர அதிகரித்தது.

கோயில் முதலாளியும், விழா உபயகாரரும் சோற்று அண்டாவுடன் வெளியே வர... அத்தருணத்தை எதிர்பார்த்தவர்கள் போல ஒருவரையொருவர் முண்டியடித்து ஏறிமிதித்து "ஐயா... எனக்கு ஐயா எனக்கு", எனக் கூக்குரலிடத் தொடங்கினர்.

'டேய் தள்ளாதையுங்கோ... ஒழுங்கா நில்லுங்கடா..." பலமாகக் கத்தினார் முதலாளி.

ஐயா எனக்கு! ஐயா எனக்கு!

கையைஎடு, கையைஎடு அண்டாவிலை கையை வைக்காதையடா" கொஞ்சந்தான் சோறு இருக்கு ஒழுங்காய் நின்றால் தருவன்..."

"எடடா கையை நாய்ப் பயலே... ஒருவன் அண்டாவில கையை வைத்தான் அவ்வளவுதான்.

சோறு திரும்பவும் உள்ளே போய்விட்டது. இனிக்கிடைக்காது ஒரு சிலரைத்தவிர பலருக்கு சோறு கிடைக்கவேயில்லை, நிலத்திலும் சிந்தியிருந்தன.

இராசையாவின் பை இன்னும் கிழிந்துபோயிருந்தது. விரல் ஓரத்தில் மட்டும் ஓரிரு சோற்றுப் பருக்கைகள்...! வெறித்துப் பார்த்தான் அம்மாவுக்கு தம்பிக்கு என்ன சொல்லுவது?

அவன் அறிவில் ஒரு விடயம் புலப்பட்டது.

"அன்னதானம் கொடுக்கிறவை சோற்றிலை முக்கா[illegible] வாசியை தெற்கு வாசல் வழியாகக் கொண்டுபோறவை' உடனே தெற்கு வாசல்பக்கம் ஓடினான்.

அவன் நினைத்தது சரி!

ஒருகையில் பெரிய வாளி நிறைந்த சோற்றுடனும், மறுகையில் கறிவாளியுடன் தொந்தி வயிற்றுடன் உபயகாரன்.

அவருக்குப் பின்னால் அதேயளவு இரண்டு பெரிய வாளிகளுடன் இன்னொருவன் - கோவில் முதலாளியின் மகன்.

ஐயா... ஐயா... இராசையா கொஞ்சம் வாய்திறக்க முன்னரே "தள்ளு தள்ளு" இங்கை மண்ணுமில்லை ஒன்றுமில்லை... அதான் வாசல்லை தந்தாச்செல்லே.

ஐயா பசிக்குதையா ஐயா ஐயா - அவன் கெஞ்சினான்.


"போடா... போ அங்கால போ..."

"பசிக்குதையா... வீட்டை அம்மாவும், தம்பியும், தங்கச்சிப் பாப்பாவும்... பசிக்குதையா... கொஞ்சமாய்த் தாங்கோ"

சோறு கிடைக்காதபோது - பசியின் களைப்பில் என்ன செய்கின்றோம் எனத் தெரியாமல் அவனையும் அறியாமல் கறிவாளியையும் எட்டிப்பார்த்தான். தொட்டது தான் தாமதம் "அடிவயிற்றில் ஒரு உதை..." தூரப்போய் அம்மா என அலறியபடி வீழ்ந்தான்.

உதைந்த உபயகாரனுக்கு சிறிது இரக்கம் வந்ததோ என்னவோ "கொண்டாடா பையை" எனக் கேட்க

எஸ்.சந்திரசேகர்



சிறுகதை

இராசையா அவசரம் அவசரமாக கிழிந்துபோன பையை நீட்டினான்.

அதில் ஒரு அகப்பை சோறு விழுந்தது. விழுந்த வேகத்திலேயே ஏற்கனவே கிழிந்தவை என்பதால் அத்தனையும் நிலத்தில் சிதறியது. இராசையா விக்கித்துப் போனான். "மோட்டுப் பயல்" என்று கூறியவாறு உபயகாரர் அப்பால் நகர்ந்து போனார்.

எங்கிருந்தோ வந்த நாய், விருந்து கிடைத்த மகிழ்ச்சியில் வாலையாட்டியபடி உண்ணத் தொடங்கியது. அது யாருக்கு நன்றி சொன்னதோ?

பசியால் அழும் தம்பி... எதிர்பார்ப்போடு காத்திருக்கும் அம்மா... கூடவே அழுகையுடன் சின்னப் பாப்பா மூன்று முகங்களும் மனத்திரையில் நிழலாடின. என்ன செய்வது?

உள்ளம் நடுங்க... உதடுதுடிக்க கண்ணீர் தளும்பிய விழிகளோடு நிமிர்ந்து பார்த்தான். சிவகாமி அம்பாள் ஐம்பொன் விக்கிரகத்தில் தரிசனம் கொடுத்துக்கொண்டிருந்தாள். 'அம்மையே... என அழுத பாலகனுக்காய் முலைப்பால் சுரந்தளித்த அன்னை' அருள் ஒழுகும் விழிகளோடு விக்கிரமாகவே நின்றாள.

இராசையா அவளையே உற்றுப்பார்த்தான்.

தூண்டாமணி விளக்கொளியில் அன்னையின் முகம் புன்னகையை அள்ளிவீசியது.

அது அவனைப் பார்த்தது - இந்த உலகத்தைப் பார்த்து கலகலவென சிரிப்பதுபோல இருந்தது.

அன்னை சிரித்தாள்... சிரித்துக்கொண்டேயிருந்தாள். அவள் ஏன் சிரித்தாள்?

# நூல் அகம்




சுதந்திரப் பறவைகள் பத்திரிகையில் அம்புலி எழுதிய கவிதைகளையெல்லாம் தொகுத்து 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' என்ற தலைப்புடைய இந்தக் கவிதை நூலினை, போராளி அம்புலி (சுகந்தி நடராசா) வெளியிட்டுள்ளார். இதற்கான ஆசியுரையை ஆழவந்த தமிழனின் தலைவர் வே.பிரபாகரன் எழுதியிருப்பது இக்கவிதை நூலிற்கு மேலும் அழகூட்டியுள்ளது. அந்தப்புரத்திலல்ல அத்தாணி மண்டபத்திலேயே கவிதை ஆசனம் கொடுக்கப்பட்டாயிற்று, என்று அழகாக 'நெடும் பயணத்தின் சக பயணி' என்ற தலைப்பில் முன்னுரையை புதுவை இரத்தினதுரை எழுதியிருக்கின்றார்.

வேர்களுக்குத்தான் தெரியும் அன்பு, பாசம், அறிவு. "நான் எப்பொழுதும் மரணிக்கவில்லை " என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் ஒரு கவிதை -

*குளத்தடி மரநிழலில்*
*எனது புல்லாங்குழலைத் தழுவும் காற்றோடு*
*கதைபேச நான்தயார்.*
*நிம்மதியான பூமியில் நித்திரை. கொள்ள*
*எனக்கும் விருப்புண்டு.*

வான்வெளியில் ஒளிர்கின்ற நட்சத்திரம் போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. காய்ந்த மேட்டிலும் தளிர்க்க முடியும். தூரத்தே தெரிகின்றது பச்சையாகவே, உற்றுப் பார்த்தவனுக்கு மட்டும் தெரியும். நம்பிக்கை ஒரு காலமும் வீண்போகாது. செயல்தான் அதன் வடிவம். கூடவே இந்தக் கவிதைகளில் கொட்டிக்கிடக்கிறது.

"மனந்திறந்த மலைகள்" என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் ஒரு கவிதை இது.

*எதிர்பார்த்துத் தங்கி கிடந்த*
*இதயங்கள்*
*தமக்கென்ற வாழ்வைப்*
*படைக்கத் தொடங்கிய*
*வரலாற்றிலிருந்து புறப்படுகின்றன*
இந்த வரிகள்.
*அலைகள் கோபமுறுவதாய்*
*கடல் சேரத்*
*தயங்கிய அவர்கள்*
*வெடிமருந்துப் படகோடு*
*அலையேறிப்*
*பகைதேடினர்.*

சுடச்சுட களத்தில் நின்று பதிவுசெய்த நாட்களை கவிதை வடிவில் எவரால் எழுதமுடியும். ஒரு படைப்பு இங்கே இலக்கியத்திற்கும், களத்திற்கும் உருவாகியிருக்கிறது.

"நிலவே மறைந்துவிடு" என்ற தலைப்பில் ஒரு கவிதை

*நேற்றிலிருந்து*
*பற்றைக்குள்ளே நான் பதுங்கியிருக்கின்றேன்.*
*கரிய பனைகளின் இடைவெளிக்குள்*
*உருமறைந்தபடி*
*கொடியவர்களின் காவலரண்கள்*
*இருப்பிடத்தையும் - அவர்களின் நடமாட்டத்தையும்*
*அறிய நான் முன்னேற வேண்டும்.*

எந்தத் தாய்க்கும் தன் பிள்ளை பொன்குஞ்சுதான். எந்த மகளிடமும் கூடுதலாகப் பாசம் இருக்கும். "அம்மா அழாதே" என்ற தலைப்பில் அமைந்த கவிதைகளில் ஒன்று -

*நான் கரிபூசிக் கிறுக்கிய சுவர்மீதே*
*என்னைக் கொழுவியிருக்கிறாய்*
*நினைவுகளையும் நிதர்சனத்தையும்*
*இணைத்துப் பார்ப்பதற்கா?*
*அம்மா அழாதே -*
*துப்பாக்கியை தூக்க வைத்து விட்டார்கள். இறப்பதற்கல்ல*
*இனிமேல் எதையும் இழப்பதற்கல்ல.*

"வெளிக்கிளரும் ஒரு மௌனக்குமுறல்" என்ற தலைப்பில் உருவான கவிதையில் ஒன்று -

*துப்பாக்கி முழக்கத்தின்*
*தூரத்திலேயே*
*எப்போதும் இருக்க விரும்பினேன்.*
*துயரச் சுமைகளை*
*எம் சந்ததி சுமந்தபோது*
*என் தோள் மாற்றி*
*இளைப்பாற விடவேண்டும்*
*என்ற எண்ணம்*
*ஒரு போதும் உதிக்கவில்லை.*

இராணுவக் காவலரண்களும் முட்கம்பிகளும் சூழ இருக்கின்றன. நகரப் பாடசாலைகளும், கோயில்களும் இதில் அடங்கும்.

"நலமேயுள்ளேன்" என்ற தலைப்புடைய கவிதையில் ஒன்று

*ஒரு நகர வாழ்வில்*
*சுவாசிக்கப் பயந்த மனிதர்களை விட*
*நாணிங்கு சுகமாய் இருக்கின்றேன்.*
*எறிகணையின் கரும்புகையில்*
*கருகிப்போன மரங்களின் கன்றுகளைப் பாதுகாப்பது*
*ஒரு பொழுது போக்கு.*
*கோர யுத்தத்தில் எத்தனை உயிர்களை பறிகொடுத்தோம்*
*மறக்க முடியவில்லை அந்த நாட்களை*

"எம்மை அழிக்க எவரேனும் நினைக்கும் வரை நாங்களும் அரக்கர்களே" என்ற தலைப்பில் உருவான கவிதைகளில் ஒன்று

*உடல் சிதறிக்கிடந்த இந்தப் பூக்களை*
*எரிக்கையில் .... புதைக்கையில்*
*எம் விழி வழிந்தது கண்ணீரல்ல நெருப்பு*
*மார்தட்டி அழுது ஆற்ற முடியாதபடி*
*இறுகிப் போயிருந்த எம் இதயம்.*

இப்படியாக ஒவ்வொருபக்கமும் விடுதலைக்கான விடிவினை களத்தில் நின்று வடித்த இந்தக் கவிதை நூல், வரலாற்றின் முதல் படியாகும்.

**செல்வன்**

# யாருக்கு வெளிச்சம்?

இரவு பகலாய் விமானக்குண்டுகளும், ஆட்லறி ஷெல்களும், இடம் தெரியாமல் வந்துவிழுந்து கொண்டே இருந்தன. அன்றைய நாள் - என்ன செய்ய - பக்கத்து வீட்டுக்காரர்களைக் கேட்டால், எங்கே போவதென்று தெரியும் என்று பக்கத்து வீட்டுக்காரரிடம் சென்று கதைத்தேன். அவர்களும் எங்களைப் போல் ஒன்றுமே தெரியாமல் யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

அங்குமிங்கும் ஓடிக் கேட்டறிய முற்பட்டபோது எதிலும் பதிலும் யாருக்கும் தெரியாமலிருக்க, திரும்பிவந்து வீட்டிலேயே இருந்தபடி யோசித்தேன். எதை எடுத்துக்கொண்டு போவது, எதை விட்டுவிட்டுப் போவது. ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் போய்த்தான் ஆகவேண்டும்.

எனது ஒரு வயது பெண் குழந்தையினை மார்பில் சுமந்து கொண்டும், எனது 4 வயது ஆண்பிள்ளையை ஒரு கையில் பிடிக்க, எனது கணவர் இரண்டு பைகளில் மட்டும் உடுப்புக்களை அடைத்துக் கொண்டு தோளில் போட்டுக் கொண்டார். பக்கத்து ஊருக்கு நடக்கத் தொடங்கினோம்.

வீதியில் அதிகமான கூட்டம் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தது. எங்கேயும் திரும்பமுடியாது, மக்கள் போகும் பக்கமே போய்க் கொண்டிருந்தோம். அழுவதற்கு வயதில்லை என்பது இந்த இடப்பெயர்வில் மட்டும் தெரிந்தது. போகும் வழியில் எனது பிள்ளைகளிற்கு தாகம் பிடித்தது. தண்ணீர் எடுத்து வரவில்லை - என்ன செய்ய - அம்மா தண்ணீர் விடாய்க்குது என்று சின்னவன் அடிக்கடி கத்தினான். ஒன்றுமே கதைக்க முடியாத பருவத்தில் எனது கைக்குழந்தை. அடிக்கடி என் முகத்தினைப் பார்த்துப் பார்த்து என் மார்பில் சரிந்தது. எனது கணவர் சொன்னார். இன்னும் கொஞ்சத் தூரம்தான் அடுத்த ஊர் வந்துவிடும். அங்கே தண்ணீர் குடிக்கலாம் என்று சொன்னார்.

இருட்டாகிவிட்டது.அடுத்த ஊரும் வந்தது. ஓ... இங்கே தண்ணீர் கேட்கலாம் என்று, கேற்றைத் திறக்க முற்பட்ட போது முடியவில்லை. பெரிய மாங்காய்ப்பூட்டுப் போட்டு பூட்டி இருந்தது. கேற்றின் தகரதத்தில் தட்டினோம் கண்ணாடி அணிந்த 50 வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் வந்தார். விடாய்க்குது குடிக்கத் தண்ணிர் கொடுக்கிறியளோ என்று கேட்க.... அந்த வீட்டுப் பெரியவரும் பதிலுக்கு வட்டில் விளக்கு வைத்துவிட்டோம் தண்ணீர் கொடுக்க முடியாது என்று செல்லிவிட்டு உடனே திரும்பிச் சென்றுவிட்டார்.

களைப்பில் ஒரு மரத்தின் கிழ் உட்கார்ந்தோம். இடம் பெயர்ந்து நிறைய மக்கள் சென்றுகொண்டிருந்தார்கள். அங்கே கூட்டத்தில் சென்றுகொண்டிருந்த ஒருவரிடம்... இருட்டுக்குள் யார் என்று தெரியாமல் கேட்டேன். தண்ணீர் கிடைக்குமா என்று.தனது பையில் இருந்த ஒரு லீற்றர் போத்தலில் இருந்த தண்ணீரை எடுத்துத் தந்தார். அதிலும் அரைவாசி தண்ணீர்தான் இருந்தது. அவருக்கே போதுமான தாகத்தான் இருந்தது. வாங்க மனமில்லாமல் இருந்தபோது தலையினை ஆட்டி இந்தாங்கோ குடியுங்கோ என்றார். எனது இரண்டு பிள்ளைகளுக்கும் தண்ணீரை ஊட்டி விட போத்தலில் இருந்த தண்ணீர் முடிந்தது. வெறும் போத்தலை வாங்கிச் சென்றார்.

எனது கணவர் எனக்குப் பக்கத்தில் வந்து இருந்து கொண்டு சொன்னார் யாருக்குத்தான் வெளிச்சம்.

**- செல்வா**

# வாக்குறுதி

படிப்பில் மிகுந்த ஆர்வமுடையவன் ரங்கன். தன்னுடைய பாடங்களை அன்றன்றைக்கே படித்துவிடுவான். இதனால் அவன் தன்னுடைய வகுப்பில் சராசரியான நிலையைப் பெற்றுக்கொண்டு வந்தான்.

குறிப்பிட்டுச் சொல்லும்படியாக முதல் மாணவன் இல்லை என்ற போதிலும் கெட்டிக்காரனாகவே அவன் விளங்கினான்.

பாடசாலையில் ஆசிரியர் படிப்பிக்கின்ற விடயங்களை சிரத்தையாகக் கேட்பான். அவற்றில் விளங்காத விடயங்களை உடனடியாக ஆசிரியர்களிடமிருந்து தெளிவாக்கிக்கொள்வான்.

O/L படித்துக்கொண்டிருக்கும்போது, ரங்கனின் வீட்டுக்கு அவனின் உறவினர் ஒருவர் வந்தார். ரங்கனின் படிப்பு, விளையாட்டு யாவற்றையும் பார்த்தார். அவனிடம் மதிப்பும் விருப்பமும் அதிகரித்தது. அன்பும் பாசமும் ரங்கனிடம் அவருக்கு அதிகரித்தது.

ரங்கனும் அவர்மீது விருப்பம் கொள்ளவே செய்தான். அவரிற்கு வேண்டிய உதவிகளையும், பணிவிடைகளையும் ரங்கன் செய்துவந்தான்.

அந்த உறவினர் ரங்கனின் வீட்டுக்கு அடிக்கடி வருவதும் சில நாட்கள் தங்கிச்செல்வதும் வழக்கமானதாகும்.

O/L படித்துக்கொண்டிருந்தபோது, ரங்கனிடம் அந்த உறவினர் கூறினார். ரங்கா நீ இந்தமுறை O/L பாஸ் பண்ணினால் நான்கு உனக்கு சைக்கிள் எடுத்துத் தருகின்றேன் என்பதாக அவர் கூற்று அமைந்தது.

ஏற்கனவே கெட்டிக்காரரான ரங்கனுக்கு O/L பாஸ் பண்ணுவது பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. அவன் O/L பாஸ் பண்ணி கலைப்பிரிவில் A/L படித்துக்கொண்டிருக்கிறான். அந்தவேளையில் ஒரு நாள் அந்த குறிப்பிட்ட உறவினர் ரங்கன் வீட்டுக்கு வந்தார்.

ரங்கன் அவரை வரவேற்று அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தான். அவரும் ரங்கனின் படிப்புகள் பற்றி அக்கறையோடு விசாரித்து அறிந்துகொண்டார். பின்னர் அவர் திரும்பிச்செல்லும்போது, நல்லாப்படி, படிச்சு முன்னேறவேண்டும். கம்பசுக்கு போகவேண்டும். அவ்வாறு கம்பசுக்குப் போனால் மோட்டார் சைக்கிள் வாங்கித் தருகின்றேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

ரங்கன் கம்பசில் படித்து முடிந்துவிட்டது. ஆனால், மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை. அவன் மனதில் எண்ணிக் கொள்ளும் விடயம் ஒன்று உண்டென்றால் அது இதுதான்.

எனக்கு நல்லதொரு வேலை கிடைத்தால் அந்த வேலையில் சேர்ந்து என்னுடைய உழைப்பில் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வாங்கவேண்டும் என்பதுதான் அந்த எண்ணம்.

வீதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த அரசியல்வாதியின் பேச்சை ஏனோ ரங்கன் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. **- நகுலன்**

# சின்னதுகள்!

அரிசித்தட்டில்
அம்மம்மாவின்
இறுக்கிப் பிடியில்,
எனது
சுண்டு விரலை அழுத்தித்தேய
முதல் எழுதிய
'அ' னா!

வேப்பம் சுள்ளித்
தடியால்
கைகளை நீட்டவைத்து
அடித்த ஒல்லி கறுத்த
வாத்தியாரை
அன்றிலிருந்து
எனக்குப்பிடிக்காது!

எங்கே போனாலும்
என்னையும் கூட்டிக் கொண்டு
போ,
அடிக்கடி பற்றிப்
பிடித்த
அப்பாவின் மணிக்கட்டுக்
கை!

எனது வீட்டில்
தொலைக்காட்சிப் பெட்டி மூடி
இருக்கும்,
வானொலி
செய்திக்கு மட்டும்
திறந்திருக்கும்,
கூடுதலாக
எனது பாட்டும் ஆட்டமும்!

முன் கதவால் நுழைந்து
பின் கதவால் வெளியே
வந்து,
வீட்டினைச்சுற்றி ஓடி
மறுபடியும்
உள்ளே வந்து
கதவின் பின்னே ஒழிந்து
கொண்டும்,
பின் தொடர்ந்து வந்து
என்னைப் பிடித்து
உணவினை ஊட்டிவிடும்
என் அம்மா!

அப்பா அடிக்க
தடுத்து விடும் அம்மா,
அம்மா அடிக்க
தடுத்து விடும் அப்பா,
கூடுதலாகப் பிழைசெய்தும்
எப்போதும்
அடிவாங்கப் போவதில்லை!

உச்சி வெய்யிலிலும்
மாலை ஆறு மணியிலும்
தென்னம் மட்டை கொண்டு
வந்து
கிரிக்கெட் விளையாடியும்,
சலிக்காமல் எதிர்பார்த்த
மைதானம்!

20. 03. 2004 இல்
சுகமில்லாத காரணத்தால்
பாடசாலைக்கு வர
முடியவில்லை,
நானே எழுதினேன்
அப்பாவின்
கையெழுத்தில்!

சப்பாத்தினை கழட்டி கையில்
கொண்டு,
உடுக்கும் சட்டைகள்
அழுக்காக,
பென்சிலைத் தொலைத்து
விட்டு
அழுது கொண்டு
ஒவ்வொரு நாளும்!

**-செல்வம**

அகதிவாழ்வின் வாழ்வின் பதிவுகள்... பகுதி XXXIII சிவா சின்னப்பொடி

# தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க முடியவில்லை

1992 இற்கும் 1995 இற்கும் இடைப்பட்ட காலத்தில் - மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கலகக்குழுச் செயற்பாட்டில் - ஆகக் குறைந்த பட்சம் 300 முதல் 500 வரையிலான இளைஞர்களே ஈடுபட்டனர்.

இவர்களைத் தட்டிக் கொடுத்து, ஊக்குவித்து இவர்களுடைய வன்முறை நிழலில் பதுங்கியிருந்து கொண்டு, புலி எதிர்ப்புப்பிரசாரம் என்ற போர்வையில் மேற்குகில் தமிழின இருப்பை - அடையாளத்தை சிதைப்பதற்கு முயன்ற கனவான்கள் என்று சகல மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் சேர்த்து ஒரு 30 முதல் 50 பேரை பார்க்கலாம்.

ஒருவிதமான 'அரசியல் மன நோய்க்கு' உட்பட இவர்கள், தங்களை ஜனநாயகவாதிகளாகவும், சமூக அக்கறையுள்ளவர்களாகவும் கூறிக் கொண்டாலும் சொந்த வாழ்க்கையில் படு பிற்போக்குத்தனமானவர்களாகவும், பிழைப்பு வாதிகளாகவும் இருந்தார்கள்.

1994 - 1996 காலப்பகுதியிலிருந்து (ஏற்கனவே இருந்ததலும்) விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்குலக நாடுகளில் தங்களது செயற்பாடுகளை விரிவாக்கி, மக்கள் மத்தியில் பல்வேறு தளங்களிலும் நின்று செயற்பட ஆரம்பித்தும், இந்தக் குழுக்களின் அட்டகாசம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

மக்கள் மத்தியில் சாதி பிரதேச இயக்க வேறுபாடுகளைக் கிளப்பி, அவர்களை ஒன்றுபடவிடாமல் தடுத்து தாயக விடுதலை செயற்பாட்டு உணர்வை சிதைத்து வந்த 'கலை வானகளின்' கொட்டமும் அடங்கிப் போனது.

தாங்கள் பின்னணியில் இருந்து இயங்கிய - கலகக் குழுக்களின் செயற்பாட்டால் தமிழ் மக்கள் அவதிப்பட்டபோது - அவர்கள் தமது சொந்த வீட்டுக்குள் இருக்கவே அச்சப்பட்ட காலத்தில் - அது தான் உண்மையான ஜனநாயகம் - பன்மைத்துவம் - தோழமை உணர்வு - என்றெல்லாம் பெருமிதம் பாராட்டிய இந்தக் கனவான்கள், விடுதலைப் புலிகள் இதையெல்லாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, தமிழ் மக்களின் இருப்பை, அடையாளத்தை பாதுக்க முற்பட்டபோது - அராஜகம் அக்கிரமம், சர்வதிகாரம், உரிமை மறுப்பு என்றெல்லாம் கூச்சல் போட்டார்கள்.

பல கனவான்கள் விடுதலைப் புலிகள் புலம்பெயர்ந்த நாடுகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். கொலை செய்கிறார்கள். மக்களை மிரட்டுகிறார்கள் என்றெல்லாம் அந்தந்த நாட்டு காவல் துறையிடரிடம் முறைப்பாடு செய்தனர். அத்துடன் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் - அவர்கள் நடத்துகின்ற ஆயுதப் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம். இலங்கையிலுள்ள ஜனநாயக அரசை கவிழ்ப்பதற்கு அவர்கள் சதி செய்கிறார்கள் என்றெல்லாம் தாங்கள் வாழும் நாட்டு அரசுகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், மனுக்கொடுத்தனர். பாரிசில் இருந்து இயங்கிய ஒரு கலைவானுக்கு இந்தப் பிரசாரத்தை செய்வதென்றே தெற்காசிய நாட்டு உளவுப்பிரிவு ஒன்று பணமும், வேண்டிய வசதிகளும் செய்து கொடுத்தது.

அரசியல் தஞ்சக் கோரிக்கை மனுவை எழுதுவதை தனது இரகசிய வேலைகளை செய்வதற்கான மறைவுத் தொழிலாக கொண்டிருந்த அந்த நபர், திட்டமிட்டு ஒவ்வொரு அரசியல் தஞ்சமனுவிலும் புலிகளை நரமாமிசம் உண்ணும் கொடிய காட்டுமிராண்டிகள் போலவே சித்தரித்து எழுதிவந்தார்கள்.

1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணுக்கு அவர் எழுதிய அரசியல் தஞ்சக் கோரிக்கை மனு, அவருடைய அரசியல் வக்கிரத் தனத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி பகுதியைச் சேர்ந்த அந்தப் பெண் 12 வயதில் வலுக்கட்டாயமாக விடுதலைப் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டு, இயக்கத்தில் சேர்க்கப்பட்டதாகவும், 16 வயதில் பருவமடைந்த தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தளபதிகள் உட்பட அந்த இயக்கத்தைச் சேர்ந்த பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும், அவர்களுடைய பாலியல் தொந்தரவு தாங்காமல் தான் இயக்கத்தைவிட்டு ஓடிவந்து விட்டதாகவும், தான் இலங்கையில் இருந்தால் விடுதலைப் புலிகள் தன்னை சுட்டுக்கொன்று விடுவார்கள் என்றும் அந்த அரசியல் தஞ்சக் கோரிக்கை மனுவில் அந்தக் கனவான் எழுதிக் கொடுத்திருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விசாரணைக்குவந்த அதிகாரி - அந்தப் பெண்ணிடம் உன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இப்போது உயிரோடு இருக்கிறார்களா? என்று கேட்டுள்ளார்.

'ஓ' அவர்கள் இப்போது பதவி உயர்வு பெற்று பெரிய ஆட்களாக இருக்கிறார்கள் என்று அந்தப் பெண கூறினார்.

இந்த விடயம் இயக்கத் தலைமைக்குத் தெரியுமா? என்று அந்த அதிகாரி திருப்பிக்கேட்டபோது, தெரியும் அங்கே இதெல்லாம் சகஜம் என்று அந்தப் பெண் பதில் சொன்னாள்.

'நல்ல கற்பனை' சொன்ன அந்த அதிகாரி விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்தால் அதைச் செய்தவர் உயிரோடு இருக்கமாட்டார் என்று சொல்லப்படுகிறதே? என்று திருப்பிக்கேட்க அது எனக்குத் தெரியாது என்று அந்தப் பெண் தடுமாறியிருக்கிறாள்.

இறுதியில் அந்தப் பெண்ணின் அரசியல் தஞ்ச மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. அந்த மனுவை நிராகரித்தற்கான காரணமாக அந்தப் பெண் தெரிவித்த எந்தச் சம்பவமும் நம்பக்கூடிய விதத்தில் இல்லை என்றும், அதற்கான தெளிவான ஆதாரங்கள் எதையும் அவர் சமர்ப்பிக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிராகரிப்புக்களை மேல் முறையீடு செய்வதற்கு அந்தப் பெண் இன்னொரு கேஸ் காரரிடம் சென்றாள்.

ஓரளவுக்கு தாயக உணர்வுள்ளவர் அந்தப் பெண்ணின் முதலாவது அரசியல் தஞ்ச மனுவை படித்துவிட்டு ஆத்திரப்பட்டார்.

தமிழ் பெண்ணான உனக்கு இப்படி எழுத வெட்கமாக இல்லையா? என்று அவர் கோபத்தில் கத்த, அந்தப் பெண அழ ஆரம்பித்துவிட்டாள். அவளை அழைத்துவந்த அவளது அண்ணன் 'ஐயோ அண்ணா எங்களுக்கு ஒண்டும் தெரியாது எல்லாம் அந்தக் கேஸ் காரன் எழுதித் தந்ததுதான். அவன்தான் இப்படி எழுதினால்தான் காட் கிடைக்கும். அவங்கள் கேக்கிற கேள்விக்கு தடுமாறாமல் பதில்சொல்ல வேணும் எண்டு சொன்னான் என்றார் அப்பாவித்தனமாக.

முதல் அடிப்படையே பிழையாக எழுதினபடியால், மேல்முறையீடு செய்து பிரயோசனமில்லை. அங்கேயும் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று கூறிய அந்தக் கேஸ் காரர், அந்தப் பெண்ணை வேறுநாட்டுக்கு அனுப்பிவைக்கும் படியும், அங்கேயும், போய் இந்தமாதிரி விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்த வேண்டாம் என்று அந்தப் பெண்ணிடமும், அவள் அண்ணனிடமும் சொல்லி அனுப்பியிருந்தார். ஒரு அரசியல்தஞ்ச மனு எழுதுவதற்கு ஆயிரத்து 500 பிரெஞ்சு பிராங் வாங்கிய அநத புலி எதிர்ப்பு கனவான 1990 இற்கும் 1993 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 200 முதல் 300 பேருக்கு மேல் இவ்வாறு மோசமான கீழ்த்தரமான கருத்தை முன்வைத்து கேஸ் எழுதிக்கொடுத்திருந்தார்.

ஒருதடவை பிரான்ஸ் அகதிகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரை நான் சந்தித்தபோது, பிரான்சில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களின் அரசியல் தஞ்ச மனுவின் படி பார்த்தால். ஸ்ரீலங்கா என்பது மிக மோசமான கொலைவெறிபிடித்த நாடாக இருக்கவேண்டும். சிங்களவர்கள் - தமிழர்களையும் தமிழர்கள- தமிழர்களையும் கொன்றுகுவிக்கும் நாடாக இருக்கவேண்டும்.

இப்படி எல்லோரும் ஒருவரை ஒருவர் கொன்று குவித்து, கொல்பவரும் கொல்லப்படுபவரும் இல்லாத மனிதர்களே இல்லாத ஒரு நாடாக இருந்திருக்கவேண்டும். ஆனால் உண்மை அப்படி இல்லாயே? என்று சொன்னார்.

எரியும் பிரச்சினைகள்... - கனகரவி -

# எரியுண்ட பூந்தோட்ட முகாம் மக்களின் புரியப்படாத உணர்வுகளும் பொருமங்களும்

இடம்பெயர்ந்து வாழுகின்றவர்கள் பல்வேறான துன்பங்களை அனுபவிககின்றமைக்கு காரணங்களைக் கூறுகின்றபோது, அரசபணிமனை உயரதிகாரிகள் ஏதோ தம்மீது குறை கூறுவதாக எண்ணுகின்றனர். எமக்குத் தெரியும், அவர்களால் எது முடியும் என்று. திணைக்களங்களில் பணியாற்றுகின்றவர்கள் தாம் எதனைச் செய்யமுடியும் என்பதனை அவர்கள் புரிந்து வைத்துள்ளனரோ தெரியவில்லை. ஆனால், அவர்களால் என்ன செய்யமுடியும் என்பதை மக்கள் புரிந்துவைத்துள்ளனர்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் என்று கூறுவார்களே. இதனை அண்மையில் வவுனியாவில் நேரடியாகப் பார்த்தோம். போரினால் இடம்பெயர்ந்து அலைந்து திரிந்த மக்கள் அரசின் ஆசை வார்த்தையை கேட்டு முகாம் வாழ்க்கைக்குள் அகப்பட்டு துன்பப்பட்டனர். அவர்களின் முகாம்களில் ஒன்றான வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள ஆறாம் யுனிட் 28.02.04 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் எரிந்தது. இதன்போது ஆறாம் யுனிட்டில் பத்து கொட்டகைகள் முற்றாக எரிந்தன. சமைத்த உணவு, உலருணவு, உடுபுடவைகள், பாடசாலை உபகரணங்கள் என அவர்கள் வைத்திருந்த சொத்துக்கள் எரிந்து நாசமாகின. தீயணைக்கும் படையினர் வவுனியாவில் இல்லை. எரிந்தது, எரிந்து முடிந்தது. ஏனைய முகாம்களிற்கு தீ பரவாமல் கட்டுப்படுத்த வவுனியாவில் உள்ள விமானப்படையினரின் நீர்த்தாங்கி வண்டிகளில் நீரைக் கொண்டுவந்து ஊற்றி தீயினைக் கட்டுப்படுத்தினர். இந்தச் சம்பவம் நல்லவேளை பகலில் நடந்தது. இல்லையென்றால் நிலைமை பரிதாபகரமாக அமைந்திருக்கும்.

பகலில் தீப்பிடித்ததால் மக்கள் குழந்தைகளை தூக்கிக்கொண்டு வெளியேறி விட்டனர். சிறார்கள் இருவர் மட்டுமே சிறு காயத்திற்கு உள்ளானார்கள். இரவில் என்றால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்குக்கூட சந்தர்ப்பம் உள்ளது.

இந்தச் சம்பவம் தேர்தல் நெருங்கி, காலத்தில் நடந்ததினால், பல வன்னி வேட்பாளர்கள் மக்களை துக்கம் விசாரித்து துயர் பகிர்ந்து கொண்டார்கள். சில வேட்பாளர்கள் சிற்றுண்டி, குளிர்பானம் என்பனவற்றை வழங்கி உதவி செய்தார்கள். விளம்பரம் தேடும் நோக்குடன் இதனை செய்தது வெட்கக்கேடான செயலாகவே தென்படுகின்றது.

இந்த யுனிட்டில் 111 குடும்பங்கள் இருந்துள்ளன. அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் உடனடியாக இறங்கி மூன்றுநாள் சமைத்த உணவு, உடுபுடவைகள், பாடசாலை உபகரணங்கள் என உதவிகளைச் செய்தன. சமாதான காலத்தில் எவருமே கவனிக்காமல் விட்ட, முகாம் வாழ்மக்கள் அனேகரின் கவனத்திற்கு உள்ளானார்கள். இதனைக் கவனித்த ஏனைய யுனிட்டுக்களை சேர்ந்த சிலர் தாமே தீ வைக்கத் துணிந்தனர். 29.02.2004 அன்று சில முகாம்கள் இரவு வேளையில் தீவைக்கப்பட்டன. இதனை மக்கள் கண்டறிநது அணைத்தனர். காரணம் என்னவென விசாரித்தபோது, புதிதாகவரும் உதவிகளை பெறுவதற்காக குறுகிய மனப்பான்மையுடன், மக்களில் சிலர் செய்த மோசமானசெயல் என அறியமுடிந்தது.

இதில் தான் பேரினவாதிகளின் எண்ணம் நிறைவேறி உள்ளதை கவனித்துக்கொள்ளலாம். நாடு கேட்டவர்கள் நிவாரணத்திற்குக் கையேந்தி நிற்கவைக்கப்பட்டனர். அதற்குள் பழக்கப்பட்டுப்போனவர்கள் தமது வாழ்வை தொலைத்துள்ளனர் என்பதையே மறந்தவர்களாக இருக்கின்றனர். அதனால், தான் தாம் வாழ்ந்த இடத்தையே எரிக்க முற்படடுள்ளனர். இதனை மக்கள் தடுத்துள்ளமை மிகக்குறைந்தளவு என்றாலும் நல்ல சிந்தனை எஞ்சியிருக்கின்றமை தெரிகின்றது.

இந்த முகாம் எரிக்கப்பட்டதும் மக்கள் தற்காலிகமாக முகாமில் உள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டனர். முகாம் எரிந்துவிட்டதனால், மீண்டும் எங்கே வாழ்வது என்ற ஏக்கத்துடன் இருந்த மக்கள், தமக்கு வவுனியாவில் காணி தந்தால் வீடமைத்து இருப்போம். அல்லது இந்த முகாமிலுள்ள காணிகளில் வீடு அமைத்து இருப்பதற்கு ஆவண செய்துதரும்படி கேட்டனர். முகாமில் உள்ள அனைவருக்கும் அதேபோன்று செய்து கொடுப்பது சாத்தியமற்றது. மீள்குடியேற்றங்கள் செய்யப்படவேண்டும். புதிய குடியேற்றங்களை செய்வது, உயர்பாதுகாப்பு வலயங்களை தொடர்ந்தும் அப்படியே வைத்திருக்க துணை போய்விடும்.

எரிந்த முகாமை சேர்ந்தவர்களுக்கு முடிவேதும் இல்லாமலிருக்க, மீண்டும் முகாம்கள் எரியத் தொடங்கியதால் பொலிஸாரின் பாதுகாப்பு அதிகரிக்க வேண்டியதாகப் போனது. இதற்கு முகாமிலுள்ள சிலரின் நடவடிக்கையும் காரணம்.

ஒரு காலத்தில் பொலிஸ் பாதுகாப்பை முற்றுமுழுதாக எடுக்கவேண்டும். பொலிஸார் முகாம் வாழ் மக்களிற்கு பிரச்சினைகளையே கொடுக்கின்றனர் என செய்திகளும் வெளிவந்தன. அப்போதிருந்த பிரச்சினை வேறு. இன்று ஏற்பட்ட பிரச்சினை வேறு. இன்று மக்களில் சிலர்செய்யும் செயலால் அனைவருக்கும் பிரச்சினையாகிவிட்டது.

1996 ஆம் ஆண்டிலிருந்து ஏழு ஆண்டுகளாக இந்த முகாமில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள், ஜயசிக்குறு, ரணகோச, ரிவிபல, வோட்டசேட் போன்ற படை நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்துள்ளனர். இவர்கள் அன்றைய இந்த படை நடவடிக்கை காரணமாக வன்னிக்குள் இடம்பெயர்ந்து வாழ வழிதெரியாமல் அலைந்து திரிந்தபோது, அரசு உலங்கு வானூர்திகளில் போட்ட துண்டுப்பிரசுரங்களை பார்த்தனர். அதில் கல்வி, இருப்பிடம், உணவு என அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் தருவோம். இங்கு சொர்க்கமே இருக்கின்றது என கூறினார்கள். இன்று ஏழு ஆண்டுகளில் அந்த மக்களின் வாழ்வையே சிதைத்து வைத்துள்ளனர். இது ஒரு திட்டமிட்டசெயல் இதுபோன்று ஏராளமான நடவடிக்கைகள் மூலம் எமதுஇனம் அழிவுகளையே சந்தித்துள்ளது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் இல்லாது போக வேண்டும். மக்கள் தாம்வாழ்ந்த சொந்த இடங்களில் மீண்டும் வாழவேண்டும். அப்படியொரு சூழ்நிலை ஏற்படுவதற்கு என்ன தடைகள் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் இல்லாதொழிக்கவேண்டும். மக்களின் இயல்பு வாழ்வு பற்றி அக்கறைப்படாதவர்கள் அவர்களின் துன்பம் பற்றி முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர். மக்களின் இயல்புவாழ்வு பற்றி சிந்திக்காத பேரினவாதிகள் வடக்கு - கிழக்கு மக்களின் ஏராளமான தேவைகளை கணக்கெடுக்காது ஓரங்கட்டி வந்தனர். எங்கள் மண்ணின் வளமும், எமது மக்களின் சுயபொருளாதார கட்டமைப்பும், உழைப்பும் மட்டுமே அவர்களின் இருப்பை இந்தளவு தூரம் காப்பாற்றி வைத்துள்ளது.

முகாம் வாழ்வுதான் சுகம் என மக்கள் அனைவரும் எண்ணி இருந்தால், இன்று மக்களை 90 வீதம் இன அடையாளத்தையே விளங்கிக்கொள்ளாதவரையில் அழித்து முடித்திருப்பார்கள். இடம்பெயர்ந்த முகாம்களில் உள்ளவர்களின் நிவாரணத்தை எதிர்பார்த்து வாழ்வதற்கான சூழ்நிலையினை தொடர்ந்தும் தக்கவைப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றமைமெய்யானது, மீண்டும் மீண்டும் ஏதாவதொரு வகையில் இடம்பெயர்ந்து வாழ்வதுதான் நல்லது என்ற எண்ணமும் முகாம்களில் வாழும் மக்களிற்குண்டு.



பூந்தோட்டம் முகாமில் ஆறாம்யுனிட் எரிந்தபோது, பலர் அழுதழுது ஏதாவது பொருட்கள் எரியாது எஞ்சியிருக்கின்றதாவென பார்த்துக்கொண்டிருந்த காட்சி வேதனையானது. திட்டமிட்ட நடவடிக்கைகளிற்குள்ளிருந்து மக்கள் மீள வேண்டுமென்றால் இப்படியான முகாம்களை மூடுவதைத்தவிர வேறுவழியில்லை. அரசு செய்யும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை இந்த எரிவினூடாகவும் பார்க்க வேண்டியதாகப்போனது. இதற்காக அதிகாரிகள் எவரும் தம்மைத் தாக்குவதாக ஏன் கருத வேண்டும் என்பது எனது கேள்வி. மக்கள் கேட்கின்றனர் எமது இயல்பு வாழ்வை உருவாக்குங்கள். இது எத்தனைபேரின் செவிகளை எட்டுகின்றதோ?

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல*
*நாட வளந்தரும் நாடு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வார்த்தை ஜாலங்களால் தமிழரை ஏமாற்ற முனையும் சந்திரிகா

இனவிவகாரத்துக்கு போரே ஒரே ஒரு வழி என்ற நிலைப்பாட்டிலிருந்த ஜே.வி.பி யை இன்று பேச்சுவார்த்தை பற்றி பேசுமளவுக்கு தான் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி கீழிறங்கி வரச்செய்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா கொழும்பு தமிழ் வாரஇதழ் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியொன் றில் பெருமையுடன் தெரிவித்தார்.

அதாவது இனவிவகாரம் தொடர்பான விடயத்தில் மத்தியில் உள்ள அதிகாரத்தைக் கீழ் மட்டத்திற்கு கொண்டுவரவேண்டுமென்றும் அதனை அவ்வாறு எடுத்துச் செல்வது எப்படி என்பது பற்றி தற்போது ஜே.வி.பி பேசிவருவதாகவும் தான் அதிகாரப்பரவல் பற்றி பேசிவருவதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது எட்டப்படும் முடிவுகள் நாட்டு மக்களாலும் ஏனைய தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும்போதும் ஜே.வி.பி இதனை ஏற்றுக்கொள்ளவேண்டிவரும் எனவும் புது விளக்கம் ஒன்றையும் கூறியுள்ள சந்திரிகா தமிழ்மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வினை வழங்கிவிடலாம் அதன் மூலம் அவர்களைத் திருப்திப்படுத்தியும் விடலாம் எனவும் மிகச் சர்வசாதாரணமாகக் கூறியுள்ளார்.

தான் என்றைக்கும் தமிழ் மக்களின் நண்பியே என்று அந்தப் பேட்டியில் நகைச்சுவை ததும்பக் கூறியுள்ள சந்திரிகா சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க சந்தர்ப்பம் ஏற்படும்போது 1997லும் 2000 ஆம் ஆண்டிலும் தான் முன்வைத்த தீர்வு யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை தொடரமுடியும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது இந்த நேர்காணலில் அவர் சாத்தியமல்லாத பல விடயங்களை சாத்தியப்படுத்த முடியும் என்ற தொனியிலேயே தனது கருத்துக்களை கூறியுள்ளதுடன் தேர்தல் கால அநுகூலங்களைக் கருத்தில் கொண்டு மக்களை குறிப்பாக தமிழ் மக்களை மீண்டும் பேய்க்காட்டும் நோக்கில் சாதுரியமாக பேசியுள்ளமையை உணரக்கூடியதாக உள்ளது.

ஜே.வி.பி யுடன் இணைந்து ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி என்ற புதுக்கூட்டமைப்பை ஏற்படுத்தும் போது இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் சந்திரிகாவின் நிலைப்பாட்டினை அவர்கள் ஆதரிக்கவில்லை என்பதும் அது தொடர்பான இரு தரப்பினர்களுக்கிடையேயும் எந்த விதமான புரிந்துணர்வும் ஏற்படவில்லை என்பதும் உண்மையே.

கூட்டணி உருவான பின்னர் நடைபெற்ற பேரணியொன்றில் பேசிய ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க அதிகாரப்பரவலாக்கலை தாம் முற்றிலும் எதிர்ப்பதாகவும் நோர்வேயின் அநுசரணையுடனான அமைதிப்பேச்சுக்கள் மீளாய்வு செய்யப்படவேண்டியவைகள் என்றும் ஆட்சிக்கலைப்புடன் புரிந்துணர்வு உடன்பாடு செயலற்றுப் போய்விட்டதென்றும் பகிரங்கமாகவே பேசியபோது சந்திரிகாவின் சகோதரர் அநுரா பண்டாரநாயக்க உட்பட அவரது கட்சிக்காரர்கள் அனைவரும் கைதட்டி உற்சாக கோஷம் எழுப்பியபோதே சந்திரிகாவின் தற்போதைய கருத்துக்கள் செல்லுபடியற்றதாகிவிட்டன.

உண்மையில் ஜே.வி.பி சந்திரிகா கூட்டணியானது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான கூட்டணி மட்டுமல்ல போர்நிறுத்தம் புரிந்துணர்வு உடன்படிக்கை உட்பட சர்வதேச சமூகத்தின் ஆதரவும் நோர்வே அரசின் அநுசரணையுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு முற்றிலும் எதிரானதேயாகும்.

இதேவேளை "அதிகாரப்பகிர்வு" என்பது அரசியல் ரீதியில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கான திட்டமல்ல என்பதும், வெறுமனே அரசியல் சலுகைகளை மட்டும வழங்கமுற்படும் ஒரு ஏமாற்றுத்திட்டமே என்பதும் 1995 இலேயே வெட்டவெளிச்சமான விடயமாகும். அப்போதே இதனை விடுதலைப்புலிகள் முற்றாக நிராகரித்திருந்தார்கள்.

பின்னர் 1995 இல் முன்வைத்த திட்டத்தையே பேரினவாத சக்திகள் கடுமையாக எதிர்த்த காரணத்தினால், 1997 இல் அதனை வெட்டிக் குறைத்து, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை மேலும் அவமானப்படுத்தும் வகையில் மீண்டும் ஒரு அதிகாரப் பரவலாக்கலை சந்திரிகா முன்வைத்தமையானது அவரின் குறுகிய மனோபாவத்தை மிகவும் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியது.

அப்போது அவர் "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற நடவடிக்கையை தமிழ் மக்களுக்கு எதிராக தீவிரப்படுத்துவதில் முனைப்புக்கொண்டவராக செயற்பட்டார் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

அந்தச் சமயம் போரில் தீவிர கவனத்தைச் செலுத்தியபடி, அதிகாரப்பரவலாக்கல் குறித்து உளறிக்கொட்டினர். இப்போது சமாதான முயற்சிகளை சிதைத்துவிட்டு அதே அதிகாரப்பரவலாக்கல் பற்றி புலம்பத்தொடங்கியுள்ளார்.

தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பான விடயங்களில் சந்திரிகா ஒருபோதுமே மனோதர்மத்துடன் நடந்து கொண்டது கிடையாது. இது அவரது தந்தை பண்டாரநாயக்க காலத்தில் இருந்தே கடைப்பிடிக்கப்பட்டதானது அரசியல் மரபன் வெளிப்பாடென்றே கூறமுடியும்.


தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் இன விவகாரத்துக்கான தீர்வாக அமையவில்லை என குற்றம் சாட்டும் சந்திரிகா, இந்த யோசனைகளின் நோக்கத்தை அடிப்படையில் கூட புரிந்துகொள்ளமுடியாதவராக இருக்கிறார் என்பதுதான் பரிதாபகரமான விடயம்.

இந்த யோசனைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்த பேச்சுக்களை நம்பிக்கையுடன் தொடர்வதற்கான ஒரு தற்காலிகமான - அதாவது 'இடைக்கால' சூழலை உருவாக்குவதற்கான - தளத்தை மட்டும் ஏற்படுத்தும் என்பதே உண்மையாகும்.

எனவே சந்திரிகா தனது இந்த நேர்கானல் மூலம்-தான் தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றும் தந்திரோபாயங்களைக் கைவிடாது தொடரவே முயல்கிறார் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்தே அனைவரையும் ஆட்டிப்படைக்க விரும்பும் சந்திரிகா, அதிகாரத்தை பரவலாக்க முன்வருவார் என்று எவரும் நம்பமாட்டார்கள்.

## நாடும் நடப்பும்



செய்தி:- பௌத்த சிங்கள அரசை அமைக்கவே பிக்குகள் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்கிறது ஹெல உறுமயக்கட்சி

# கொழும்பு மாவட்டத்தில் — 55 ஆயிரம் வாக்குகளை பெறமுடியுமென நம்பிக்கை!

### சுதந்திர முன்னணி தமிழ்வேட்பாளர் கூறுகிறார்

கொழும்பு

கொழும்பு மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரான நோபிள் வேதநாயகம் தம்மால் 55 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஒரே தமிழ் வேட்பாளரான நோபிள் வேதநாயகம் ஒரு வர்த்தகராவார். 1981 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகள் இவர் கொழும்பு மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராகப் பதவி வகித்தவர்.

தான் இந்தத் தேர்தலில் 55 ஆயிரம் வாக்குகளைப் பெற்றால் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எதிர்காலத்தில் புலிகளுடன் பேச்சு நடத்தும்போது, அரசாங்கக் குழுவில் ஜனாதிபதி சந்திரிகா தன்னையும் இடம்பெறச் செய்வார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளமே அமைச்சர்களும் பெறுவர்!

### ஐ.தே.க.தவிசாளர் கூறுகிறார்

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்கும் பட்சத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அதேயளவு கொடுப்பனவே, அமைச்சர்களுக்கும் வழங்கப்படும் என கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

தொழில் நிபுணர்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லும் வரை இந்த நடவடிக்கையை மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருக்கும் யோசனைகள் குறித்துக் கருத்துத்தெரிவித்த அவர், அவை தேர்தல் வாக்குறுதிகள் அல்லவெனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைகள் நடைமுறைப் படுத்தக்கூடிய செயற்திட்டங்கள் எனவும், ஏற்கனவே மேற்கொளளப்பட்ட செயற்திட்டங்கள் எனவும் மலிக் சமரவிக்கிரம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்க ஊடகங்கள் மீது ஹெல உறுமய குற்றச்சாட்டு

ஒருதலைப்பட்சமான முறையில் அரச ஊடகங்கள் செயற்படுவதாகத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமயவினர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவிடம் முறைப்பாடொன்றைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இக்கட்சியின் பொதுச் செயலாளர் கருணாரட்ன தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்ததாவது -

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினி கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ரி.என் ஆகிய அரச ஊடகங்கள் ஒரு தலைப்பட்சமான முறையில் செய்திகளை வெளியிடுகின்றன.

அத்துடன் எமது கட்சியின் விளம்பரங்களை ஒளிபரப்புவதற்கு ஐ.ரி.என் ஏற்கமறுக்கிறது. ஆனால் ரூபவாஹினி விளம்பரத்தை ஒளிபரப்ப ஏற்றாலும், ஒருநாளில் இரண்டு தடவைகள் மட்டுமே ஒளிபரப்புகிறது.

அத்துடன் தற்போது புத்தபிக்குகளின் கொடியுடன் கூடிய எமது கட்சி விளம்பர ஒளிபரப்பை ரூபவாஹினி நிறுத்திவிட்டது. ஆனால், இவர்கள் தேசியக் கொடியுடன் கூடிய பல விளம்பரங்களை ஒளிபரப்பி வருகின்றார்கள். எனவே அரச ஊடகங்கள் வேறுபட்ட நிலையில் புத்தபிக்குகளை அணுகுகின்றார்கள். ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினர் இதுவரை எமது கட்சி பிக்குகளை தொலைக்காட்சி மூலமான பிரசாரத்திற்கு வாய்ப்பளிக்கவில்லை எனவும் தனது கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும்!

### பழ.நெடுமாறன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிக்கு இந்தியா தனது பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

. இந்தியா இலங்கைக்கு அயலகத்தில் உள்ள நாடு. இலங்கையில் சமாதான முயற்சிகள் மூலம் ஏற்படுத்தப்படும் தீர்விற்கு தனது தனது. ஆதரவினைத் தெரிவிக்கவேண்டும்.

அத்துடன் பிணை அனுமதி தொடர்பான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தேர்தல் தொடர்பாக என்னால் பேச முடியும். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவென்றோ, அவர்களது தடையை அகற்றக்கோரியோ என்னால் எதுவும் கதைக்கமுடியாது.


எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் மூலம் சந்திரிகா சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல உள்ளாரா என்பது தெரியவந்துவிடுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச அரசியல்

# மேற்கின் பாணியில் மேற்குக்கு விளாடிமிர் புட்டின் பதிலடி

கே.ரி.கணேசலிங்கம்





விளாடிமிர் புட்டின் 71 சதவீதமான வாக்குகளால் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். புட்டினை எதிர்த்து போட்டியிட்ட கம்யூனிஸ்க் கட்சி வேட்பாளர் மிகமோசமான நிலையில் வாக்குகளைப் பெற்றதுடன் தனது தோல்விக்கு மேற்கு நாடுகள் கூறுவதுபோல் அல்லாமல் நியாயமான காரணங்களை ஏற்றுள்ளார். ஆனால், மேற்கு நாடுகளில் அனேகமானவை புட்டினின் தெரிவை நிராகரிப்பதுடன் ஜனநாயகத்திற்கு எதிரான தேர்தலாகவும் வர்ணித்துள்ளனர். எனவே இவ்வாரம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் புட்டின் மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கான அரசியல் பின்ன்ணியை நோக்குவோம்.

முதலில் மேற்கு நாடுகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களின் வலுவான அம்சங்கள் எவையென்பதை பார்ப்போம். அதாவது, புட்டின் தேர்தல் பிரசாரத்தின்போதும், தேர்தல் நிகழும்போதும் ஊடகங்களை தனது பிரசாரத்திற்கு மட்டுமே பயன்படுத்தியுள்ளார் என்பதுடன் அரச ஊடகத்துறையையும், அரசாங்க ஊழியர்களையும் முழுமையாக தனக்குச் சார்பாகவே பயன்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாக முன்வைத்தனர். அத்துடன், தேர்தல் கடமைகளை மேற்கொண்டவர்களையும், புட்டின் தமக்கு சாதகமாக திசைதிருப்பியுள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கு நாடுகள் கூறுவது போல் ரஷ்யாவில் தனியார் ஊடகத்துறையின் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன், அரச ஊடகங்களே இன்னும் ஆதிக்கம் செய்வதாகக் கருதலாம். ஆனால், ரஷ்சியாவின் அரச ஊடகங்களையும் தனியார் ஊடகங்களையும் தவிர, பிறநாட்டு முகவர்கள் சார்பாக வளர்ந்துள்ள ஊடகங்கள் அதிகமான பங்கை ரஷ்சியாவில் செலுத்தி வருகின்றன. அதனால், அவ்வகை ஊடகங்கள் கணிசமான பங்கை தேர்தலின்போது ஏற்படுத்தியிருக்கலாம். அதற்கான வாய்ப்பு அதிகமாகவே காணப்பட்டது. அப்போது எந்த ஊடகமும் சுதந்திரமற்ற தேர்தல் என்று கூறாத நிலையில், தேர்தல் முடிந்தகையோடு இப்படியான அபிப்பிராயம் வெளியே வந்துள்ளமை அதற்கான சந்தேகத்தை அதிகரிக்கின்றது. உண்மையில் தேர்தல காலத்தை அவதானித்து கருத்துவெளியிட்ட ஊடகங்களே அப்படியான அபிப்பிராயத்தை ஆரம்பத்தில் முன்வைத்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து தேர்தல் முடிந்தகையோடு திட்டமிட்டு பொய்யான குற்றச்சாட்டை முன்வைப்பதுபோல் அல்லவா அமைகின்றது. அப்படியாயின் மேற்குக்கு என்ன பிரச்சினை, புட்டின் பதவியில் தொடர்ந்திருப்பதால் ஏற்படப் போகின்றது. அதனை சற்றுவிரிவாக நோக்குவோம்.

ஒன்று- புட்டின் சுயேட்சை வேட்பாளராக முன்னின்றபோது அவர் முன்வைத்த பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் சற்று இறுக்கமும் வித்தியாசமானவையுமாகும். அதனால் ரஷ்சியப் பொருளாதாரம் நிலையான ஒரு மாறுதல் காலத்தை தொடருவதற்கான வாய்ப்பை அளிப்பதுடன் கடந்த காலங்களில் ரஷ்சியாவின் இருப்பை பாதுகாப்பதில் புட்டின் கணிசமான பங்கை செலுத்தியவர்.

இரண்டாது- புட்டின் காலத்தில் சர்வதேச அரசியலில் திருப்பங்கள், மாறுதல்கள் நிகழாது விட்டாலும் மிரட்டல்களையும், அமெரிக்கா போன்ற சக்திகளின் அச்சுறுத்தலை சரியாக எதிர்த்த தலைவராக விளங்கினார். இதனால் புட்டினது தனிப்பட்ட செல்வாக்கு வளர்ந்ததுடன் ரஷ்சியாவினதும் அதன் பிராந்தியத்தினதும் பாதுகாப்பு நிலை பலப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாவது- புட்டின் நிலையான சீர்திருத்தத்தை மேற்கொண்டு ரஷ்சியாவின் பொருளாதாரத்தை நிமிர்த்த முயன்றுவருகின்றார். குறிப்பாக ரஷ்சியா புட்டினின் கடந்த ஆட்சிக் காலத்தில் 40 சதவீதமான வர்த்தகத்தில் ஈடுபடும் நாடாக மாறியுள்ளது. வர்த்தகம் மட்டுமன்றி சந்தை, உற்பத்தி, மக்கள் வாழ்க்கைச் செலவு படிப்படியாக சாத்தியப்பாடுடைய வேகத்தில் (மெதுவாக) நகர்ந்து செல்கின்றது.

நான்கு - புட்டின் ஒரு உளவுப்பிரிவைச் சேர்ந்த தலைவர். ரஷ்சியாவின் நலனை முதன்மைப்படுத்தி மீளவும் ஒரு நிரந்தரமான, வலுவான அரசியல் கொள்கையைக் கொண்ட நாடாக மாற்றிவிடுவார் என்ற அச்சம் மேற்கு நாடுகளுக்கு உண்டு. அதனை நிறைவேற்ற விடாது தடுப்பதற்கு அல்லது புட்டினது கௌரவத்தை சிதைக்க மேற்குக்கு எடுத்த முயற்சியாகக்கூட அமையலாம்.

ஐந்தாவது- புட்டினின் தேசியப்பற்றுதல் என்றுமில்லாத அளவு செல்வாக்கை உயர்த்தியுள்ளது. புட்டின் - லெனினுக்கு பின்னர் மதிக்கப்படும் மனிதனாக வளர்ந்துவருகின்றமை அரசியல் பொருளாதார சமூக அடிப்படையில் மேற்க்குக்கு அபாயமானதாக விளங்குகிறது. எனவேதான் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேற்கு எடுத்த நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. உலகத்தின் இருதய நிலம் (Hard Land) ரஷ்சியா என்பதை மேற்கு நாடுகள் என்றுமே மறக்கவும் இல்லை. அத்தகைய சிந்தனையை மறுதலிக்கவும் இல்லை. அத்தகை நிலத்தை ஆழுவதே மேற்கின் உபாயமாக உள்ளது. அந்த நிலத்தால் ஆளப்படுகின்ற உலகத்தையே கோட்பாட்டாளர்கள் முன்நிறுத்த, மேற்குலகம் அதனை முறியடித்து அந்த நிலத்தை ஆளப்படுவதன் மூலம் இருதய நிலத்தின் முக்கியத்துவத்தை தமதாக்கிக்கொண்டனர். இதன் ஒரு முயற்சியாகவே சோவியத் யூனியன் உடைவு சாத்தியமானது.

எனவே அத்தகைய உணர்வுக்குள் ரஷ்சியப் பிரதேசத்தை தொடர்ந்து தக்கவைக்க வேண்டுமாயின், புட்டின் தொடர்ந்து பதவியில் இருப்பது ஆபத்தானது. அப்படியாயின் மேற்கு ரஷ்சியாவில எத்தகைய ஆட்சி முறைமையை உருவாக்க வேண்டும் என விரும்புகிறது.

ரஷ்சியாவின் நிரந்தரமானதும் தொடர்ச்சியானதுமான ஆட்சிமுறையை ஏற்படவிடாது தடுப்பது ஒரு கொள்கை ஒன்றை தெளிவாகக் கொண்ட அரசாங்கத்தினதோ, அதிகாரத்தினதோ செல்வாக்கு ஏற்படாது பார்த்துக்கொள்வதுடன் எந்த ஆட்சிமுறைமை அங்கு ஏற்பட்டாலும் அதனை மேற்கு ஏற்கத்தயாராக உள்ளது. அதாவது, கம்யூனிஸ்ட்டுக்கள் அல்லது சோஸலிஸ்ட்டுக்கள் அல்லது முதலாளித்துவவாதிகளோ ஆட்சிக்கு வரலாம்.

ஆனால், அவர்களிடம் நிரந்தரமான, சுதேச, தேசிய, வலுமிக்க கொள்கைகள் எதுவுமே இருக்ககூடாது. மேற்குடன் சாய்ந்து போகக்கூடிய தலைமைகளை ரஷ்சியா கொண்டிருக்கவேண்டும். அதிலும் குறிப்பாக ரஷ்சியாவின் இருப்பை காட்டிக்கொடுக்கக் கூடிய தலைமைகளையே மேற்கு விரும்புகின்றது.

எனவே, மேற்கின் விருபபுக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடியவராக புட்டின் காணப்படுகின்றார் என்பதனால், அவரையும் அவரது தெரிவையும் மேற்கு நிராகரிக்கின்றதொன்றாகும்.

மேற்கு குறிப்பிடும் சுதந்திரம், ஜனநாயகம் என்பது பற்றிய குற்றச்சாட்டை நிராகரித்த புட்டின், அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் எப்படித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை முன்னிறுத்தி - உலகத்தில் ஜனநாயகத்தின் பலவீனத்தை புட்டின் மீண்டும் ஒரு தடவை அம்பலப்படுத்தியுள்ளார்.

மேற்கின் குற்றச்சாட்டின் சரியானது, தவறானது என்பதற்கு அப்பால் அமெரிக்கத் தலைவரையும், ரஷ்சியத்தலைவரையும் சமமானவராகக் கணிக்க புட்டின் முயன்றுள்ளார். உண்மையில் புட்டினை காட்டிடும் புஷ் வெளிப்படையான ஜனநாயக மீறலையும், சுதந்திரத்துக்கு எதிராகவும் செயற்பட்டுள்ளதனை காணலாம்.

எனவே, மேற்கு விரும்பும் ஜனநாயகம் என்பது அதன் நலன் சார்பான முடிவாகவே அமையும். அதற்கு எது சாதகமானதும் இலாபமானதுமாக அமைந்திருக்கின்றதோ அதனை அது ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை எனக்கூறும். அது ரஷ்சியாவில் நடக்கும் தேர்தலாக அமையலாம் அல்லது யாழ்ப்பாணத்தில் நடக்கும் தேர்தலாக அமையலாம்.. எதுவாயினும் மேற்கின் நலனுக்கு இசையும் பிரிவினரை பாதுகாக்கும் உத்திகளையே அது எப்போதும் கையாளும். இதிலிருந்து விடுபடுவது என்பது கடினமான விடயம். அப்படியாயின் மேற்குக்கு சலாம் போட்டு, நலன்களுக்கு இசைந்து கொடுத்து செயல்படவேண்டிய நிலை ஏற்படும். அப்படியாயின் தேசிய நம்பிக்கை வலுவற்றுவிடும். விதேச உணர்வு மலிந்திருக்கும் அதுவே மேற்குக்கும் ரஷ்சியா போன்ற நாடுகளுக்கும் இடையிலான இழுபறித் தன்மைக்குக் காரணமாகும்.

எனவே புட்டின் மேற்கை நிராகரித்தது போன்று கிழக்கு - மேற்கை எதிர்கொள்ளுமாயின் கிழக்கிற்கென ஒரு தனித்துவம் சாத்தியப்படும்.

---

# அன்னையின் அடிபணிந்து அவனருள் பெறுவோம்!

தென்மராட்சியலே சைவமும், தமிழும் தழைத்தோங்குகின்றதும். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை போன்றவர்கள் வாழ்ந்ததுமான கிராமமே மட்டுவில்.

தொன்று தொட்டு சைவத்தையும் தமிழையும் வளர்த்த மட்டுவில் பகுதியின் வடபால் வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் வாரி வழங்கியபடி வீற்றிருக்கும் அருள்மிகு பன்றித் தலைச்சி அம்மனுக்கு பொங்கல் விழா பங்குனித் திங்கள் ஆரம்பமாகும்.

வருடந்தோறும் பங்குனி மாதத்து திங்கட் கிழமைகளில் அம்மனுக்கு அடியவர்கள் ஒன்று கூடி பொங்கலிட்டு வணங்குவதும், காவடிகள், பறவைக்காவடிகள், தூக்குக் காவடிகள் போன்றவற்றை எடுத்தும் நமது நேர்த்திக் கடனக்களை நிறைவுசெய்வது வழக்கம். இவ்வருடம் 5 திங்கட்கிழமைகள் வருவது சிறப்பானதாகும்.

தென்மராட்சி மக்கள் மட்டுமன்றி வடமராட்சி, வலிகாமம். தீவகம் என குடாநாடே திரண்டு வந்து அன்னையை வழிபடுவது அன்னையின் அருளுக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

சாவகச்சேரி நகரில் இருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இவ்வாலயத்தின் மேற்குப் புறம் அழகிய கத்தரித் தோட்டங்கள் உள்ளது. இவ்வாலயத்துக்கு வரும் அடியவர்கள் அனைவரும் இந்தக் கத்திரித் தோட்டத்தில் விளையும் கத்தரிக்காயை வாங்காது செல்வதில்லை.

இங்கு விளையும் கத்ரிக்காயின் சுவையே தனிதான். மட்டுவில் என்றால் பன்றித் தலைச்சி அம்மனும், கத்தரிக்காயும் தான் அனைவருக்கும் ஞாபகம்வரும். அந்தளவுக்குப் புகழ்வாய்ந்த முட்டிக் கத்திக்காய் இன்று இனம் மாறினாலும் இன்னும் அதே சுவை குன்றாது கிடைப்பது புதுமையே.

நகரத்தில் இரந்து ஒதுக்குப்புறமாக அமைதியான சூழலில் எழில் கொஞ்சும் பனைமரங்கள், மருதமரங்கள் நிறைந்ததாக ஒரு காலத்தில் விளங்கிய இவ்வாலயம் 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த அநர்த்தங்களினால் சேதமடைந்து சோபை இழந்து தற்போது மெதுவாக புனரமைக்கப்பட்டு எழுந்து நிற்கின்றது. ஆனால், சூழ இருந்த பனைமரத் தோப்புக்களையோ, தென்னை மரங்களையே மீள உருவாக்கமுடியுமா என்பது கேள்விக் குறியே.

நாட்டில் நிலவுகின்ற தற்போதைய சமாதான சூழலில் பெருமளவில் மக்கள் கூடுவார்களென எதிர்பார்த்து மட்டுவில் மண் அவர்களை வரவேற்கத் தயாராகியிருக்கின்றது. பங்குனி பிறந்துவிட்டால் இப்பகுதி மக்கள் எவருமே மாமிசம் புசிப்பதில்லை சைவாசாரசல்ர்களானக, புனிதர்களாக தமது உறவுகளையும் நண்பர்களையும் வரவேற்கத் தயாராகி விடுவர்.

வீடுகள் வீதிகள் அனைத்தும் துப்புரவு செய்யப்பட்டு அழகுடன் விளங்கும். அதிகாலை 4.00 மணிமுதல் அலையலையாக ஒன்று திரண்டுவந்து ஆலயத் தீர்த்தக் கேணியில் நீராடிப் பொங்கலிட்டு வழிவடுவோர் ஏராளம் அனைவரது குறைகளையும் தேவைப் பாடுகளையும் செவிமடுத்து அவற்றை வழங்குவதில் அன்னைக்கு நிகர் அன்னையேதான்.

கச்சான், ஐஸ்கிறீம் முதல் மணிக்கடை, பாயக் கடை, புடவைக்கடை பாத்திரங்கக் கடை வரை விதம் விதமான வியாபார நிலையங்களும் அமைத்து வியாபாரம் அமோகமாக நடைபெறும். சிறியவர்முதல் இளையோர் பெரியோர்வரை அனைவருக்கும் ஒரு பக்திமயமான கொண்டாட்டம்தான் பசுவின் தலையினைப் பன்றியின் தலையாக மாற்றியபடியால் பன்றித்தலைச்சி எனப்பெயர்கொண்ட அன்னையின் அடிபணிந்து அவளருள்பெறுவோமாக.

---

# வரி செலுத்தச் செல்பவர்கள் 2 நாட்கள் செலவிடும் நிலை

(உடுவில்)

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களுக்கு வரி செலுத்தச் செல்பவர்கள் இரண்டு நாட்கள் செலவிட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வாகன வரி செலுத்துபவர்களிடத்தில் விண்ணப்பப்பத்திரத்தையும் பணத்தையும் பெற்றுக்கொள்ளும் அங்குள்ள ஊழியர்கள் உடனடியாக அதற்கான பற்றுச் சீட்டையும் வரி அனுமதிப்பத்திரத்தையும் வழங்காது மறுநாள் வந்து பெற்றுச்செல்லுமாறு பணிக்கின்றனர்.

இதனால் அங்கு வரி செலுத்தச்செல்லும் அரசாங்க, வங்கி, தனியார் கடை ஊழியர்கள் வரியை செலுத்தாது இருப்பதாகவும் கூறப்படுகிறது. முன்னர் கச்சேரியில் ஒரே நாளில் வரி செலுத்தி பற்றுச் சீட்டு பெற்றுக்கொணடதாகவும்அனால் தற்பொது இரண்டு நாட்களை செலவழிக்க வேண்டியிருப்பதாக வரிசெலுத்துவோர் தெரிவிக்கின்றனர். (101)

# சிறு வீதிகளை திருத்தும் பணிகள் வெளிநாட்டுக் கம்பனிகளிடம்!

(நெல்லியடி)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுவந்த வேலைகள் பல வெளிநாட்டுக்கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்காரணமாகச் சிறு வீதிகள் திருத்தம் தமது திணைக்களத்தால்இனி மேற்கொள்ளப்படாதெனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஆயினும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய வீதிகளை இனங்கண்டு அந்த விபரங்களை கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கூடாகத் தமக்குத் தெரவித்தால் அவற்றைத் தானம் உரியவர்களுக்குச்சிபார்சு செய்யமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் பின்வரும் பகுதிகள் திருத்தம் செய்யப்படவேண்டியவையென வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தொண்டமனாறு - வல்லை - துன்னாலை வீதி சாவகச்சேரி - புலோலி வீதி, வல்லைப் பாலம், அல்வாய் - நெல்லியடி - துன்னாலை வீதியிலுள்ள மதகுகள், மூத்த விநாயகர் ஆலயத்தடி மதகு. (13)

# கியூமெடிக்காவில் இலவச பந்சிகிச்சை

(கொக்குவில்)

இலவச பல் சிகிச்சைகளை தினமும் கியூமெடிக்கா நிறுவனம் நடத்திவருகிறது.

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் காலை 8.30 மணிதொடக்கம் பகல் 12.30 மணிவரை இந்த சிகிச்சைகள் நடாத்தப்பட்டுவருகிறது.

யாழ்.வேம்படி வீதி முதலாம் குறுக்கு வீதி சந்தியில் அமைந்துள்ள கியூடெக்கா நிறுவனத்தில் நடத்தப்பட்ட இலவச பல்சிகிச்சைகளை நோயாளர்கள் பெற்றுப் பயனடையலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (206)

## உலக நோக்கு

ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதையடுத்து

# ஐவரிகோஷ்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது!

ஐவரி கோஷ்டில் எதிர்கட்சிகளும், போராளிக் குழுக்களும் தலைநகர் சுபிட்ஜானில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளப்போவதாக தெரிவித்த பின்னர் தலைநகரில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் பிரஞ்சுப் படையினரால் நடத்தப்படவிருந்த இராணுவப் பயிற்சியும் நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய நாடுகளின் சமாதான படையினர் இருவாரங்களில் ஐவரிக் கோஷ்டில் பணியாற்றுவதற்கு செல்லவுள்ளனர். இராணுவப் புரட்சியொன்று 18 மாதங்களுக்கு முன் ஐவரி கோஷ்டில் நடத்தப்பட்ட பின்னர் ஐக்கிய நாடுகளின் சமாதானப் பணியாளர்கள் அங்கு செல்லவுள்ளனர். ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ள இடத்தை அதியுயர் பாதுகாப்பு வலயமாக குடியரசுப் படையினர் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

# இஸ்ரேல் படையினர் தாக்குதல் ஐந்து பலஸ்தீனர்கள் பலி

பலஸ்தீன காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் ஒருவரைத் தேடி அபேசன் கிராமப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக இஸ்ரேலிய படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் அபேசன் பகுதியிலுள்ள அகதிமுகாம் ஒன்றின் அருகில் இடம்பெற்றதாகவும், இதன்போது ஹமாஸ் இயக்கத்தின் உள்ளூர்த் தலைவர் உட்பட 5 பேர் கொல்லப்பட்டதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.


ஹமாஸ் இயக்க சந்தேக நபரை இஸ்ரேல் படையினர் கைதுசெய்ய முயற்சித்தபோது அவர் அபேசன் பகுதியிலிருந்து தப்பியோட முயற்சித்தவேளை அவரை ஓடவேண்டாம் எனப் படையினர் தடுத்தபோது அவர் தன்னை தானே சுட்டு இறந்தார் எனவும், இவர் சிலவேளைகளில் குண்டுகள் தாங்கிய அங்கியை அணிந்திருக்கலாம் எனவும், இஸ்ரேலியப் படையின் பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால், இவரது கூற்றை மறுத்த உள்ளூர் வைத்தியசாலை வட்டாரங்கள் இவர் இஸ்ரேல் படையினரால் சுடப்பட்டு இறந்ததாகவும், இந்தக் கலகத்தின்போது படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மேலும் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் பல பொதுமக்கள் காயமடைந்ததாகவும் மேலும் தெரிவித்தனர். இந்தப் படை நடவடிக்கையில் கவச வாகனங்களுக்குப் பாதுகாப்பாக ஹெலிகொப்டர்களையும் பாவித்ததனால் இஸ்ரேல் படையினருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென படை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிறைக் கைதிகளைத் துன்புறுத்திய அமெரிக்க படையினர் மீது விசாரணை

பாக்தாத்தில் சுபுகரைப் என்ற சிறைச்சாலையில் 6 அமெரிக்க படைவீரர்கள் அந்தச் சிறைச்சாலையின் கைதிகளை துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, படைவீரர்களுக்கெதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இந்தப் போர் வீரர்கள் சிறைக் கைதிகளை தாக்கியும், வேறுவிதமான துன்புறுத்தல்களையும் மேற்கொண்டிருந்தனர். மேலும் 20 கைதிகள் இவ்வாறு துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

சிறைக்கைதிகளுக்கெதிரான தாக்குதல்களை மேற்கொண்ட, பதவிநீக்கம் செய்யப்பட்ட 17 படைவீரர்களில் 6 இராணுவப் பொலிஸ் பிரிவு அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்கள் தனிப்பட்ட முறையில் விசாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் முடிவடைந்துள்ளதாகவும், தண்டணை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறையிலிருந்து தப்பிய கைதிகள் மீளவும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யு.எஸ்.எஸ். கோலி என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் 'ஏடன்' துறைமுகத்தில் எண்ணை நிரப்புவதற்காக தரித்துநின்ற வேளையில் குண்டுத்தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டிருந்தது.





இந்தத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதலில் ஜமால் அல் படாவி, பாட் அல் குஷா ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டு, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தனர். மே மாதம் இருவரும் சிறையில் இருந்து தப்பிக்கொண்டனர். மீண்டும் அவ்ஜான் மாகாணத்தில் வண்டி ஒன்றில் பிரயாணம் மேற்கொண்டிருந்தவேளையில் துப்பாக்கிப் பிரயோகத்தின்பின் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அல் - கொய்டா அமைப்பிற்கும், படாவிகளுக்குமிடையிலும் தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு.எஸ்.எஸ் கோலி என்ற போர்க் கப்பல் தாக்குதலில் ஏடன் துறைமுகத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்காக தரித்துநின்ற வேளையில் சிறிய படகொன்றில் சென்று தற்கொலைத் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் 17 பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர். இவர்கள் 1999 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து ஏடன் துறைமுகத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்கு வரும் கப்பல்களை தாக்குவதற்கான திட்டங்களை மேற்கொண்டுவந்துள்ளனர். மீண்டும் 2000 ஆம் ஆண்டில் யு.எஸ்.எஸ் சுலைவன் என்ற கப்பலை ஏடன் துறைமுகத்தில் தாக்கும்முயற்சியில் தோல்வியடைந்திருந்தனர்.

இவர்களது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸில் தேர்தல்கள் பிராந்திய ரீதியில் ஆரம்பம்

(பரிஸ்)

பிரான்ஸில் பிரதேச ரீதியாக தேர்தல்கள் ஆரம்பித்துள்ளன. இந்தத் தேர்தல்கள் ஆட்சியில் உள்ள அரசிற்கான பொதுஜன அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும் தேர்தலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 70 வீதமான வாக்காளர்கள் இந்தத் தேர்தலை அரசிற்கெதிரான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமாக அமையுமெனவும் தெரிவித்துள்ளனர்.




பிரான்ஸில் வேலையில்லாப் பிரச்சினையும், குற்றங்களும் அதிகரித்துள்ளன.

அத்துடன், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் 50 வீதமான மக்கள் தேர்தலில் வாக்களிக்க விருப்பமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் 22 பிரதேச சபைகளுக்கான தேர்தலாக அமைந்தபோதும் இது ஒரு தேசிய பிரச்சினையாக கருதப்படுகின்றது.

# தாய்வானில் ஜனாதிபதித் தேர்தல் முறையாக நடைபெறவில்லையாம்

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

தாய்வானில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.



அத்துடன், வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் கோரிக்கையும் விடுத்துள்ளன.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி 'சென் சூ பியான்' 30 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தினால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வெற்றியீட்டியதற்கான வாக்கு வித்தியாசம் 1 வீதமானதெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் 11 தடவைகள் வாக்குகள் எண்ணப்பட்டு 330,000 வாக்குகள் ஏற்கப்பட்டிருந்தது.

இதனால், ஜனாதிபதி சென்னுக்கு எதிராக போட்டியிட்ட தேசிய கியோமின் ராங் கட்சியைச் சேர்ந்த 'லியென்' நீதிமன்றத்தில் தேர்தல் உரியமுறையில் நடத்தப்படவில்லை எனத் தெரிவித்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கேட்டிருந்தார். இதனால் வாக்குப் பெட்டிகள், வாக்குகள் மீண்டும் எண்ணப்படும்வரை பாதுகாக்கப்படவேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் ஜனாதிபதி 'சென்' தேர்தல் பிரசாரத்தில் துப்பாக்கிக் காயங்களுக்கு உட்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் மக்களிடையே அனுதாபத்தை உருவாக்கியுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.



இதேவேளை, தேர்தலில் ஜனாதிபதி சென் வெற்றி பெற்றிருந்தாலும் தாய்வானை சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தும் மக்கள் கருத்துக் கணிப்பில் தோல்வியடைந்திருந்தார் - கருத்துக் கணிப்பில் ஏற்பட்டிருந்த தோல்வி தாய்வானை சுதந்திர நாடாக பிரகடனப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சீனாவிற்கு கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டுள்ளது.

# பாக்தாத்தில் ரொக்கட் தாக்குதல் இரண்டு ஈராக்கிய பொதுமக்கள் பலி



பாக்தாத்தின் மத்திய பகுதியை நோக்கி சதாம் ஆதரவுப் படைகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் இருவர் கொல்லப்பட்டும் 6 பேர்வரை காயப்பட்டுமுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சதாம் ஆதரவுப் படைகளால் ஏவப் பட்ட ரொக்கெட்டுக்களில் ஒன்று போக்குவரத்து சந்தியிலும், இரண்டாவது அதற்கு அருகிலும், மூன்றாவது படையினரின் பொழுதுபோக்குப் பிரதேசத்தையும் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படைவீரர் ஒருவர் காயப்பட்டிருந்தார். அத்துடன், இரு ஈராக்கியர்கள் உயிரிழந்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழரின் அபிலாஷைகளை திம்பு கோட்பாடே தீர்க்கும்!

## புளொட் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலான தீர்வே, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், அபிலாஷைகளையும் பெற்றுக்கொடுக்கும் என, ஜனநாயக மக்கள் முன்னணி (புளொட்) அமைப்பின் தலைவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

தமிழ்மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து உருவாக்கப்படக்கூடிய ஓர் தீர்வுதான் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடியதாக அமையும்.

இந்தத் திம்புக்கோட்பாட்டின் அடிப்படையில் ஓர் தீர்வை அரசு வழங்கவேண்டும். அதேவேளை, வடக்கு - கிழக்கில் அழிந்துபோயிருக்கும் கிராமங்களில் அபிவிருத்திப் பணிகளை தொடரவேண்டும்.

அதேவேளை - நின்றுவிட்ட சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படவேண்டும். இந்த அடிப்படையில் தான் நாம் இம்முறை தேர்தலில் எமது கொள்கைகளை முன்வைத்துள்ளோம்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நாம் எம்மாலான பணிகளை முன்னெடுப்போம்.

குறிப்பாக - அமையப்போகும் அரசுக்கு கூடுதலான அழுத்தத்தைப் பிரயோகித்து அதன் மூலமாக ஓர் சமாதானத்தை உருவாக்குவோம என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# உமாமகேஸ்வரன் சமாதியில் படையினர் நேற்று தேடுதல்!

வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள உமாமகேஸ்வரனின் சமாதி வளவில் நேற்று நண்பகல் அதிரடிப் படையினர் கடுமையான தேடுதல் நடத்தினர்.

இந்த வளவில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்தப் பிரதேசம், கனரக வாகனத்தின் உதவியுடன் தோண்டப்பட்டதாகத் தெரிய வருகிறது.

புளொட் இயக்கத்தின் முன்னாள் செயலதிபர் உமாமகேஸ்வரனின் உடல் தகனம் செய்யப்பட்ட சமாதிக்கருகில், முக்கிய சில புளொட் உறுப்பினர்களின் சமாதிகளும் உள்ளன.

இந்தப் பகுதியில் நிலத்தை தோண்டி தேடுதலை மேற்கொண்டபோதிலும் - ஆயுதங்களோ, சந்தேகத்துக்கு இடமான பொருட்களோ கண்டுபிடிக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

தமது தலைவர்கள் புதைக்கப்பட்ட சமாதியின் வளவை படையினர் தோண்டியமை குறித்து புளொட் தலைமைச் செயலகம் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

# கிறிஸ்தவ மதப் போதகர் ஒருவர் சபை வாயிலில் உண்ணாவிரதம்

யாழ்.செயலகத்திற்கு அருகில் செயற்படும் கிறிஸ்தவ மதப்பிரிவொன்றின் போதகர் ஒருவர் நேற்று முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

அந்தச்சபையைச் சேர்ந்த அருளப்பு டேவிற் என்பவரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

யாழ்.செலகத்திற்கு அருகில் இயங்கிவரும் கிறிஸ்தவ மதப்பிரிவொன்றின் சபையைச் சேர்ந்த போதகர் திடீரென அந்தச் சபை வாசலில் உண்ணாவிரதமிருக்கத் தொடங்கியுள்ளார். கடந்த 30 வருடகாலமாக அந்தச் சபையின் போதகராகக் கடமையாற்றி வருகின்ற போதிலும், தற்போது அவரது பதவி புதிய நிர்வாகசபைத் தெரிவின் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்தே அவர் நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகிறார். இதனை அறிந்த யாழ். பொலிஸார் அவரை அழைத்துச் சென்று விசாரணை நடத்திவிட்டு நேற்று மாலையே அவரைக் கொண்டுவந்து உரிய இடத்தில் இறக்கிவிட்டுச் சென்றனர்.

அவரது போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், இன்றும் அவரது போராட்டம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (தீ)

# மட்டக்களப்பு-அம்பாறையில் தேர்தல் பிரசாரம் சூடுபிடிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மீண்டும் சூடுபிடித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கருணாவின் முடிவால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருந்தனர்.

எனினும், தேர்தலுக்கு இன்னமும் 10 நாட்கள் மட்டுமே இருக்கின்ற நிலையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்கள் முழுவதிலும் தமிழரசுக் கட்சியினரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கொக்கட்டிச்சோலை உட்பட்ட பல பகுதிகளுக்கும் நேற்று முதல் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இதனால், மட்டக்களப்பில் சோர்ந்திருந்த தேர்தல் பிரசாரம் சூடுபிடித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் பொறித்த தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல் வன்முறைகள் 45 ஆக அதிகரிப்பு

நடாளுமன்றப் பொதுத்தேர்தல் குறித்து நேற்றுக்காலை வரை உள்ள 24 மணித்தியாலத்தில் 45 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகப் பதிவாகியுள்ளது.

இந்தத் தகவலை தேர்தலுக்கான பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் குறித்து அறிவிப்பு வெளியாகியதை அடுத்து நேற்று வரை 710 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் 32 வன்முறைச் சம்பவங்கள் குற்றவியல் சட்டத்தை மீறியதாகவும் ஏனைய 13 சம்பவங்களும் தேர்தல் சட்டத்தை மீறியதாகவும் பதிவாகியுள்ளது. (01)

# எதிர்பார்க்காத நேரத்தில் மக்கள் மீது தேர்தல் திணிப்பு

## பிரதான கட்சிகளைச் சாடுகிறார் வாசுதேவ

மக்கள் எதிர்பார்க்காத வகையில் தேவையில்லாத ஒரு பொதுத்தேர்தலை ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார் என கண்டியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது, புதிய இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது - நாட்டிலுள்ள இரண்டு பிரதான அரசியற் கட்சிகளும் ஒரே கொள்கைகளையே கொண்டுள்ளன.

ஜே.வி.பியினர் கடந்த அரசாங்கத்தின் போது, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் லஞ்ச ஊழல் ஆணைககுழு என்பவற்றை அமைக்க ஆதரவு தெரிவித்தனர். ஆனால், தற்போது இதே ஜே.வி.பியினர் இது தொடர்பாக மௌனம் சாதிக்கின்றனர் எனத தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய கட்சியின் தலைவரான விக்கிரமபாகு கருணாரட்ண - எமது கட்சி தொடர்ந்தும் இடதுசாரிக் கொள்கைகளை முன்னெடுக்கும்.

அத்துடன், பொதுமக்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதுடன் அரச ஊழியர்களின் சம்பள விடயம் தொடர்பாகவும் கவனமெடுக்கப்படுமெனவும் கூறினார்.

# தப்பியோடிய படையினருக்கு விலகல் சான்றிதழ்கள்!

படையிலிருந்து தப்பியோடியவர்களை நிரந்தரமாக பணியில் இருந்து நீக்கிவிடுவதற்கான இறுதி நிகழ்வுகள் இன்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

படையில் இணைந்த காலப்பகுதியில் இருந்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கும் பயிற்சிக் காலத்தின் போது படையில் இருந்து தப்பியோடியவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதுடன், இவர்களுக்கு படையில் இருந்து விலக்கியமைக்கான சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

இத்தகையநிகழ்வு முன்னர் களுத்துறை, கம்பஹா ஆகிய மாவடங்களில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கருணா குழுவினரால்...

போட்டியிடும் புளொட் அமைப்பினர் தமது பிரசார நடவடிக்கையை மேற்கொள்வதற்காக கட்சியின் 10 பேர் அடங்கிய குழுவினர் நேற்று மட்டக்களப்புக்குச் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு கிரான் பகுதியில் பிரசாரம் நடத்த முற்பட்டவேளை அங்கு வந்துசேர்ந்த கருணா குழுவினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபடவிடாது தடுத்து நிறுத்தியதுடன், அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு எச்சரித்துள்ளனர்.

இதனையடுத்து, அந்தப் பிரசாரக் குழுவினர் அங்கிருந்து வெளியேறினர்.

(01)

## புலிகள்...

வயது குறைந்த போராளிகளை அடையாளம் கண்டு கொள்வதற்காக - புலிகளால் அமைக்கப்பட்ட குழு விசாரணைகளை நடத்தியபோது 35 சிறுவர்களும் தவறான தகவல்களைக் கொடுத்து புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டது தெரியவந்தது.

இதையடுத்தே - 18 வயதுக்குட்பட்ட 35 சிறுவர்களையும் யுனிசெப் பிரதிநிதிகளிடம் நேற்று புலிகள் ஒப்படைத்தனர். இவர்களை ஒப்படைத்தமை குறித்து நேற்று யுனிசெப் பிரதிநிதிகள் வரவேற்புத் தெரிவித்தனர்.

## கூட்டமைப்பு...

அவரைத் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தாக்கப்பட்டவரின் ஆதரவாளர்களும் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4ஆம் திகதி ஆலையடிவேம்பிலும் நேற்று பாண்டிருப்பிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவிருந்த போதிலும், இறுதிநேரத்தில் அவை ரத்துச்செய்யப்பட்டன. இதனால், மக்கள் பெரும் விசனமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு கிடைத்த செய்திகளின்படி, அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டிருந்த காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (07)

## ஹைபேஸ் வானில்...

வந்த ஏழு பேர் கொண்ட இனந்தெரியாத குழு ஒன்று சிறுவனிடம் முந்திரிகை பழங்களை கொடுத்து சாப்பிடுமாறு கூறியது.

சிறுவன் முந்திரிகை பழங்களை சாப்பிட்ட பின் மயக்கமடைந்தான். மயக்கமடைந்த சிறுவனை அந்தக் குழுவினர் கடத்திச்சென்று வீடு ஒன்றில் அடைத்து வைத்திருந்தனர். மயக்க நிலையிலிருந்து மீண்ட சிறுவன் தான் இருட்டு வீடொன்றில் அடைக்கப்பட்டு இருப்பதை உணர்ந்தான். சிறுவனுக்கு இரவு வேளை சாப்பிடுவதற்கு கடத்தல்காரர்கள் உணவு வழங்கப்பட்டபோதும், உணவினை உண்பதற்கு சிறுவன் மறுப்புத் தெரிவித்தான்.

இந்த நிலையில் இரவு சிறுவன் அடைக்கப்பட்டிருந்த வீட்டின் கதவை தள்ளிப்பார்த்தபோது கதவு திறக்கப்பட்டதையடுத்து, சிறுவன் அந்த இடத்தை விட்டு தப்பி கால்நடையாக வெளியேறினான். வீதியால் சிறுவன் சென்றுகொண்டிருந்த சமயம் வர்த்தகர் ஒருவர் சிறுவனை தனது வீட்டில் இரவு வேளை தங்க வைத்து காலை பருத்தித்துறை செல்லும் பஸ்சில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பினார்.

மேற்படி சிறுவன் காணாமற்போன விடயம் தொடர்பாக பெற்றோர் பொலிஸாரிடமும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திலும் புகார் செய்திருந்தனர். கடத்தல்காரர்களிடம் இருந்து சிறுவன் சாதுரியமாக தப்பி வந்த சம்பவம் வடமராட்சி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (12)

## ஐ.தே.மு...

ஐக்கிய தேசிய் முன்னணியை இத்தேர்தலில் வெற்றிகொள்ளச் செய்வதற்காக சில இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே எனவும் அவர் மேலும் தொிவித்தார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டினை தேர்தல் கண்காணிப்பாளர்கள் அமைப்பு முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது.

## புளியங்குளத்தில்...

முதல்நாள் ஏற்றிவரப்பட்டு புளியங்குளத்தில் தங்கவைக்கப்படுவர். இவ்வாறு - இவர்களைத் தங்கவைப்பதற்கு தங்குமிட வசதி உட்பட சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வாக்களிக்கும் மக்களை ஏற்றிவர நூறு பஸ்கள் தேவையாகவுள்ளது. இதில் ஐம்பது பஸ்கள் வவுனியாவில் உள்ளன. முப்பத்தைந்து பஸ்கள் தனியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். பதினைந்து பஸ்கள் தேவை என போக்குவரத்துத் திணைக்களத்திடம் கோரியுள்ளோம்.

அத்துடன் - வவுனியா பாலமோட்டையில் வசிக்கும் மக்களினை வாக்களிப்பதற்கு அழைத்துவர நான்கு லொறிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களை, படையினரின் சோதனை நிலையத்திற்கு அருகில் அமைத்தால், இந்த மக்களின் பிரயாணத் தூரத்தைக் குறைக்க முடியுமென நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

வாக்களிக்கச் செல்லும் மக்கள் ஓமந்தையிலுள்ள படையினரின் சோதனைச் சாவடியில் படையினரின் வழமையான சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவந்துவிட்டது
கம்பியூட்டர் ஃபோக்கஸ்
தகவல் ஊடாக நுட்பம் அடைவோம்
யாழ்.மண்ணில் அனைத்து புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய அரியதோர் தகவல் புதையல்
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
தமிழ் மண்ணில் இருந்து தமிழில் ஓர் கணினி மாத இதழ்
(சி-2340)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.